# 1. 1995 இன் பொருளாதார செயலாற்றம் பிரச்சினைகளும் கொள்கைகளும்

## 1.1 பொதுவான நோக்கு

மிதமான உயர் பொருளாதார வளர்ச்சி, தாழ்ந்த பணவீக்கம், இறைச் சமன்பாடின்மையில் கணிசமான குறைப்பு, சென்மதி நிலுவையில் மீண்டும் உருவான பொதுவான பற்றாக்குறையொன்று, என்பன 1995 இல் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பண்புகளாக விளங்கின. விரைந்த வளர்ச்சி, விலை உறுதிப்பாடு, மற்றும் வெளிநாட்டு உறுதிப்பாடு என்பவற்றுடன் இசைந்து செல்லும் வகையில் அமைப்புக் குறைபாடுகளைச் சரிசெய்து வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையினைக் குறைவடையச் செய்யும் வரைச் சட்டமொன்றிற்காக அரசின் கடப்பாடு 1995 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரைகளிலும் மற்றும் கொள்கை விளக்கக் கூற்றுக்களிலும் மீண்டும் உறுதிப்படுத்தப் பட்டது. 1995 இல் இக்குறிக்கோளினை எய்துவதில் குறிப்பாக தீர்வைச் சீரமைப்பு மற்றும் தனியார் மயப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. 1994 இன் மட்டத்துடன் ஒப்பிடுகையில் வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்கிலும் மொத்தப் பற்றாக்குறையிலும் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. எனினும் பொதுவான இறைச் செயலாற்றம் 1995 இன் எதிர்பார்ப்புக்களைவிடக் குறைவாகக் காணப்பட்டது. அதிகரித்துச் செல்லும் பாதுகாப்புச் செலவானது வரவு செலவுத் திட்ட மூலவளங்களில் அதிகரித்த உரிமைக் கோரல்களைக் கொண்டிருந்தது. அதிகரித்துச் செல்லும் உலக கோதுமை விலைகளுடன் கோதுமை மாவிற்கான உதவிக் கொடுப்பனவு மூலவள ஒதுக்கீடு மற்றும் உள்நாட்டு வேளாண்மையில் பாதகமான தாக்கங்களுடன் வரவு செலவுத் திட்டத்தில் மேலதிக சுமையைக் கொண்டிருந்தது. 1995 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வருவாய் அதிகரிப்பு மற்றும் செலவுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் அரசதுறையில் சம்பளங்கள், கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவற்றிலிருந்து எழும் அதிஉயர் நெகிழ்ச்சியற்ற செலவு மற்றும் பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் என்பவற்றின் காரணமாக அமைப்புக் குறைபாடுகள் காணப்பட்டன. இவை குறுகியகால அரசிறைச் சீராக்கங்களில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தன. இதன்படி, 1995 வரவு செலவுத் திட்டத்தில் அரசினால்

அட்டவணை 1.1

தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1993 - 1995

| விடயம் | தொகை (ப.இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1993* | 1994* | 1995* | 1994* | 1995* |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 453,092 | 523,300 | 598,327 | 15.5 | 14.3 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 150,783 | 159,269 | 167,953 | 5.6 | 5.5 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | 447,113 | 514,990 | 591,245 | 15.2 | 14.8 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | 148,744 | 156,571 | 165,860 | 5.3 | 5.9 |
| 5. நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.உ. | 499,622 | 575,528 | 658,503 | 15.2 | 14.4 |
| 6. நடைமுறைச்சந்தை விலைகளில் மொ.தே.உ. | 499,760 | 579,147 | 661,902 | 5.9 | 14.3 |
| 7. நடுவாண்டுக் குடித்தொகை ('000) | 17,619 | 17,865 | 18,112 | 1.4 | 1.4 |
| 8. தலைக்குரிய மொ. தே. உ. | | | | | |
| நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் (ரூபா) | 25,377 | 28,827 | 32,644 | 13.6 | 13.2 |
| நிலையான காரணிச் செலவு விலைகளில் (ரூபா) | 8,442 | 8,764 | 9,157 | 3.8 | 4.5 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூபா) | 28,357 | 32,215 | 36,357 | 13.6 | 12.9 |
| 9. நடைமுறைச்சந்தை விலைகளில் மொ.தே.உ. | 28,365 | 32,418 | 36,545 | 14.3 | 12.7 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

எதிர்பார்க்கப்பட்ட நடைமுறைக் கணக்கு மிகையினையும் வங்கித் தொழில் முறைக்கான தேறிய கொடுப்பனவினையும் எய்துவது இயலாத காரியமாக விளங்கியது.

இதனைத் தொடர்ந்து இறைச் செயலாற்றமானது விரிவுத்தாக்கத்தினைக் கொண்டிருந்ததோடு உறுதியான உயர் நாணய வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில் ஏற்றுமதிகள் சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்தன. எனினும் மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பொதுவான தன்மையுடன் சென்மதி நிலுவையில் மொத்தப் பற்றாக்குறையும் செலாவணி வீதத்தில் விரைந்த தேய்வும் காணப்பட்டது. இதேவேளையில் அதிகரித்த உண்மை வருவாய்களும் நேர்க்கணிய உண்மை வட்டிவீதங்களும், வங்கியின் அதிகரித்த சேமிப்புத் திரட்டல் முயற்சிகளுடன் ஒன்றிணைந்து உள்நாட்டுச் சேமிப்புக்களில் அதிகரிப்பினை விளைவித்தன. எனினும் உள்நாட்டுப் பாதுகாப்பு நிலைமைகளில் நிச்சமற்ற தன்மை, தொழிலாளர் பிணக்குகள்,, உலக மூலதனம் சிதறிச் சென்றதன் காரணமான விளைவுகள், மெச்சிக்கோ நெருக்கடியைத் தொடர்ந்து செலாவணிச் சந்தையின் மாறுபடும் தன்மை என்பவற்றின் காரணமாக தனியார் முதலீடு மிகத் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 1.2. உண்மைத் துறை அபிவிருத்திகள்


### பொருளாதார வளர்ச்சி

தொடர்ச்சியான பொருளாதாரத் தாராள மயமாக்கலுடன் கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி விசையினைப் பேணும் வகையில் 1995 இல் இலங்கையின் பொருளாதாரம் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மிதமான இவ்வுயர் வளர்ச்சிக்கு திறந்த சந்தை மற்றும் நட்புச் சந்தை பொருளாதாரக் கொள்கைகள் உறுதியான ஏற்றுமதிச் செயலாற்றம், சாதகமான வானிலைத் தன்மைகள் மற்றும் பண்டங்களின் தொடக்க விலைகளின் மேம்பாடு என்பவற்றினால் ஆதரவு வழங்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 5.5 சதவீதமாகும்.

14 சதவீத பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் இலங்கையின் தலைக்குரிய வருமானம் 1994 இன் ரூ. 32,418 (ஐ.அ. டொலர் 656) உடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ 36,545 (ஐ.அ.டொலர் 713) இனை எய்தியது. தலைக்குரிய வருமானத்தின் இந்த மட்டமானது தெற்காசிய நாடுகளின் மிகப் பெரிதான போதிலும் கைத்தொழில் நாடுகளினதும் புதிதாக வளர்ச்சியடையும் கிழக்காசிய புதிய கைத்தொழில் நாடுகளினதும் தலைக்குரிய வருமானத்தைவிட மிகக்குறைந்ததாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவின் சார்புரீதியில் உயர் வருமானத்தைக் கொண்ட நாடுகளுக்கிடையில் இலங்கை விளங்கியது. எனினும் அதனைத் தொடர்ந்து பொருளாதாரச் செயலாற்ற நியதிகளில் பின்னடைந்துள்ளது. அண்மைக்கால பொருளாதார வளர்ச்சியானது ஊக்கம் தருவதாயினும் உலகின் ஏனைய நாடுகளுடன் விசைவேகத்தினைப் பேணுவதற்கு உயர்ந்த செயலாற்றம் வேண்டப்படுகின்றது. நாட்டின் ஒருபகுதியில் தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தின் மத்தியில் அண்மைக் கால வளர்ச்சிச் செயலாற்றம் எய்தப்பெற்றுள்ளமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். தலைக்குரிய வருமானத்தில் இலங்கைக்கும் புதிய கைத்தொழில் நாடுகளுக்குமிடையிலான சமன்பாடின்மை பல்லாண்டுகாலமாக உருவானதோடு அதிகரித்துவரும் வருமான இடைவெளியானது கூடியளவில் கவனத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

முதலீட்டு வருமான வெளிப்பாய்ச்சலுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி சீராக்கஞ் செய்யப்படுமிடத்து 1995 இல் மொத்த தேசிய உற்பத்தி 5.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1.4 சதவீதம் கொண்ட குடித்தொகை வளர்ச்சிக்கு இது சீராக்கஞ் செய்யப்படும் போது 1995 இல் தலைக்குரிய உண்மை வருமானம் 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

1995 இல் 31 சதவீத பங்களிப்புடன் தயாரிப்புத்துறை பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டுச் சென்றது. வர்த்தகம் 13 சதவீதத்துடனும் வேளாண்மை 12 சதவீதத்துடனும் போக்குவரத்தும் தொலைத்தொடர்பும் 11 சதவீதத்துடனும் நிதியியற்



வரைபடம் 1.1
உண்மை வெளியீட்டின் வளர்ச்சி வீதம்

பணிகள் 10 சதவீதத்துடனும் பங்களிப்புச் செய்த ஏனைய முக்கிய துறைகளாக விளங்கின. விரைந்த வளர்ச்சியினைக் கொண்ட துறைகளாக நிதியியற் பணிகள் (11 சதவீதம்), மின்சாரம், வாயு, நீர் வழங்கல் (10 சதவீதம்), தயாரிப்பு (9 சதவீதம்) என்பன விளங்கின. வேளாண்மைத்துறை மிதமான 3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

ஒரு காலத்தில் வேளாண்மைத்துறையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இலங்கைப் பொருளாதாரம் அதிகரித்துவரும் பன்முகப் படுத்தலுக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து காட்டிவந்தது. மொத்தத் தேசிய உற்பத்தியின் 22 சதவீதப் பங்குடன் மொத்த மற்றும் சில்லறை விற்பனைத்துறை முன்னணித் துறையாக விளங்குகின்ற வேளையில் 21 சதவீதப் பங்கினைக் கொண்ட தயாரிப்புத்துறை முதற்றடவையாக 20 சதவீதப் பங்கினைக் கொண்ட வேளாண்மைத்துறைக்கு முன்னால் சென்றுள்ளது.

### வேளாண்மை

1995 இல் காட்டுத்தொழிலையும் மீன்பிடித்தொழிலையும் உள்ளடக்கிய முழுமையான வேளாண்மைத் துறை உண்மை நியதிகளில் 3.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் இது பெரும்பாலும் முன்னைய ஆண்டின் அதே அளவான வீதமாகக் காணப்பட்ட வேளையில் ஏனைய துறைகள் கூட்டாக 6 சதவீதத்தினால் அதிகரித்தன. 1960 களின் ஆரம்ப காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்களிப்பு 40 சதவீதமாகும். 1990 இல் இது 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1994 இல் 20 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு 1994 இன் 13 சதவீதத்திலிருந்து 1995 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஒரு காலத்தில் மிக முன்னணியில் திகழ்ந்த இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் நீண்டகாலமாக இடைக்கிடையே நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. உயர்ந்த கூலிச் செலவு, குறைந்த விளைச்சல், குறைந்த உற்பத்தித் திறன் என்பன தேசியமயமாக்கலின் பின் மேலும் அழுத்தமடைந்தன. சமூக பொருளாதார கண்ணோக்கில் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்தில் அரசின் நேரடியான தலையீடானது வாணிபக் கண்ணோட்டத்தைவிட முன்னுரிமையினைப் பெற்றது. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை (மதோஅச) இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (இஅபெதோகூ) என்பவற்றினால் பெருந்தோட்டங்கள் முகாமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பாரிய நிதி இழப்புக்கள், வீண்விரயம், அதிகரித்த செலவு, திறமையில் வீழ்ச்சி போன்ற பண்புகள் காணப்பட்டன. இதற்கான நிவாரண வழிமுறையொன்றாக 1992 இல் அரசு மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தீர்மானித்தது. ஐந்து ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் அரச பெருந்தோட்டங்கள் பெரும்பாலானவற்றின் முகாமைத்துவம் தனியார்துறைக்குக் கையளிக்கப்பட்டது. எனினும் இவ்வொப்பந்தங்களின் குறுங்காலத் தன்மையின் காரணமாக புதிய முதலீடுகளின் மூலமாக பெருந்தோட்டங்களைத் தரமுயர்த்துவதற்கு தனியார் முகாமையாளர்களுக்கு எத்தகைய ஊக்குவிப்பும் காணப்படவில்லை. எனவே, ஆழமாக வேரூன்றிய இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக 1995 இல் அரச பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்தை மீளப்புதுப்பிக்கும் விருப்பத் தேர்வுடன் 50 ஆண்டுக் குத்தகைக்கு விடுவதற்கான தீர்மானமொன்று அரசால் மேற்கொள்ளப்பட்டது.

தேயிலை, இறப்பர், தெங்கு என்பவற்றின் கூட்டிய பெறுமதி முறையே 1.6 சதவீதத்தினாலும் 0.9 சதவீதத்தினாலும் 5.1 சதவீதத்தினாலும் அதிகரித்தது. 1995 இல் கொழும்பு ஏலங்களில் தேயிலை விலைகள் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 65.12 இலிருந்து கிலோக்கிறாம் ஒன்று ரூ. 72.21 இற்கு அதிகரித்ததுடன் ஏற்றுமதி விலைகளில் 12 சதவீத அதிகரிப்புக்கு இணைந்து செல்லுவதாக இருந்தது. உலக நாடுகளின் குறிப்பாக சுயாதீன பொதுநலவாய நாடுகளின் (முன்னைய சோவியத் யூனியன்) கேள்வி மீட்சியடைந்தமையினையும் உள்நாட்டு நுகர்வின் அதிகரிப்பு காரணமாக இந்தியாவின் ஏற்றுமதிக்கான மிகைத் தேயிலையின் அளவு குறைவடைந்தமையையும் இது பிரதிபலிப்பதாக இருந்தது. 1995 இல் உற்பத்தியானது முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியினை 2 சதவீதத்தினால் விஞ்சியதுடன் 2,460 இலட்சம் கிலோக்கிறாம்களையும் எய்தியது. சாதகமான வானிலைத் தன்மைகளே இதற்கான முதன்மைக் காரணமாகும். மேம்பட்ட முகாமைத்துவமும் சிறு உடைமையாளர்களின் அதிகரித்த உற்பத்தித் திறனும் கவர்ச்சிகரமான விலைகளும் இதற்குப் பங்களிப்புச் செய்தன.


இயற்கை இறப்பருக்கான உலகக் கேள்வி மீட்சியடைந்தமை, மலேசியாவின் உற்பத்தியில் காணப்பட்ட விழ்ச்சி என்பனவற்றின் காரணமாக 1995 இல் இறப்பர்த்துறை மிகச் சிறந்த விலைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. நீண்டகாலமாக தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட விலைகளின் காரணமாக இறப்பர்துறையில்

தொடர்ச்சியான பிரச்சினைகள் காணப்பட்டமையினால் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்டமையின் காரணமாக இலங்கையின் உற்பத்தியாளர்கள் இவ்விலை அதிகரிப்புக்களின் உண்மையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள இயலாது காணப்பட்டனர். தொழிலாளர் பற்றாக்குறையின் காரணமாகவும் இத்துறை தொடர்ச்சியான பிரச்சினைகளைக் கொண்டிருந்தது. இறப்பர் பயிரானது பயிரிடப்பட்ட பரப்பில் 60 சதவீதத்தினைக் கொண்டுள்ள சிறு உடைமையாளர் பயிர் ஒன்றாகும். சிறு உடைமையாளர் துறையில் உற்பத்திச் செலவு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. பெருந்தோட்டங்களில் சராசரி உற்பத்திச் செலவு 32 சதவீதத்தினால் அதிகரித்தது. இது அதிகரித்த கூலிச் செலவினையும் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடுகளையும் ஏனைய உள்ளீடுகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது. 1995 இல் மேம்பட்ட விலைகள் சிறந்த வகைகளின் மீள் பயிரிடலுக்கான சில ஊக்குவிப்புக்களை வழங்கின. எனினும் இதுவரையில் 50 சதவீத பெறுபேறுகளை மட்டுமே கொண்டிருந்த இறப்பர் சிறு உடைமையாளர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு உடைமையாளர்களின் ஏமாற்றம் தரும் செயலாற்றமானது இறப்பர் துறையில் இயக்கவிசை குன்றியுள்ளமையைக் காட்டுகின்றது. இதேவேளையில் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு அதிகரித்துச் செல்வதானது இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டுக் கைத்தொழில்களின் வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டின் உற்பத்தியினை 5 சதவீதத்தினால் விஞ்சியுள்ளதோடு, 1994 இன் 21 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து 1986 இன் பின்னர் சிறந்த விளைச்சல்களையும் பதிவு செய்துள்ளது. உற்பத்தியின் வளர்ச்சிக்கு முன்னைய இரு ஆண்டுகளிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காலங் கடந்த தாக்கமும் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடும் காரணமாகும். அதிகரித்த வளமாக்கிப் பிரயோகத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் சராசரி விளைச்சல் 5 சதவீதத்தினால் அதிகரித்தது. வழங்கலின் அதிகரிப்புக் காரணமாக இலங்கை மக்களின் அன்றாட உணவில் முக்கிய பங்கினை வகிக்கும் தேங்காயின் உள்நாட்டுச் சராசரி விலை 1995 இல் மிதமாக வீழ்ச்சியடைந்தது. ஏனைய பயிர்களைப் போலவே கூலி அதிகரிப்புக் காரணமாகவும் 1995 இல் உற்பத்திச் செலவு 7 சதவீதத்தினால் ரூ 1.97 இற்கு அதிகரித்தது. வதிவிட கட்டுமானங்களுக்காக நகர்ப்புறப் பிரதேசங்களில் காணிகளின் அளவு குறைவடைகின்ற போதிலும் தெங்கின் கீழான நிலப்பரப்பு அதிகரித்தது.

வரைபடம் 1.2

மொ.உ.உ. இன் துணைவாரியான உள்ளமைப்பு



## அட்டவணை 1.2
## மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்கமும் வளர்ச்சி வீதமும் 1993 - 1995
## நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1993* | 1994* | 1995* | 1994* | 1995* |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் | 31,554 | 32,593 | 33,659 | 3.3 | 3.3 |
| தேயிலை | 2,985 | 3,116 | 3,166 | 4.4 | 1.6 |
| இறப்பர் | 681 | 688 | 694 | 1.0 | 0.9 |
| தெங்கு | 2,799 | 3,376 | 3,548 | 20.6 | 5.1 |
| நெல் | 6,447 | 6,750 | 7,067 | 4.7 | 4.7 |
| ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடல்தொழிலும்) | 18,642 | 18,663 | 19,184 | 0.1 | 2.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் | 3,693 | 3,915 | 4,048 | 6.0 | 3.4 |
| 3. தயாரிப்பு | 28,806 | 31,418 | 34,294 | 9.1 | 9.2 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு பொருட்களின் பதனிடல் | 3,157 | 3,567 | 3,724 | 13.0 | 4.4 |
| ஏனையவை | 25,649 | 27,851 | 30,570 | 8.6 | 9.8 |
| 4. கட்டடவாக்கம் | 10,400 | 11,024 | 11,564 | 6.0 | 4.9 |
| 5. பணிகள் | 76,330 | 80,319 | 84,388 | 5.2 | 5.1 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 150,783 | 159,269 | 167,953 | 5.6 | 5.5 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -2,039 | -2607 | -2,093 | – | – |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 148,744 | 156,662 | 165,860 | 5.3 | 5.9 |

* தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இதேவேளையில் தெங்கின் மீள் பயிரிடலுக்கும் புதிய பயிரிடலுக்குமான காணியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. இவ்வாண்டில் இடைப்பயிரின் கீழான நிலப்பரப்பும் அதிகரித்தது.

கறுவா, புல்லெண்ணெய், சாதிக்காய், சாதிப்பத்திரி என்பன அதிகரிப்புக்களைப் பதிவு செய்தவேளையில் கோப்பி, மிளகு, கராம்பு மற்றும் ஏலம் என்பன வீழ்ச்சிகளைப் பதிவு செய்தமையினால் ஏனைய ஏற்றுமதிப் பயிர்த்துறை கலப்பான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது.

இதேவேளையில் உள்ளூர்ச் சந்தை சார்ந்த வேளாண்மைத்துறை இவ்வாண்டில் சிறந்த செயலாற்றத்தைக் கொண்டிருந்தது. மலிவானஉதவிக் கொடுப்பனவினைக் கொண்ட கோதுமை மா கிடைக்கத்தக்கதாக இருந்தபோதும் சாதகமான வானிலைத் தன்மைகள் மற்றும் அதிகரித்த வளமாக்கிப் பாவனை என்பனவற்றின் காரணமாக நெல் உற்பத்தி 5 சதவீதத்தினால் அதிகரித்தது. 1994/95 பெரும்போக அறுவடை 17.6 இலட்சம் மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய பெரும்போக உற்பத்தியை 5 சதவீதத்தினால் விஞ்சியது. 1995 இன் சிறுபோக அறுவடை 3 சதவீதத்தினால் 10.5 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு அறுவடை செய்யப்பட்ட பரப்பின் அதிகரிப்பும் மேம்பட்ட விளைச்சலுமே காரணமாகும். 1995 இல் சராசரி விளைச்சல் 5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து எக்டேயர் ஒன்றுக்கு 3,535 கிலோக்கிறாம்களாக விளங்கியதுடன் வளமாக்கிப் பிரயோகத்தில் 17 சதவீத அதிகரிப்பும் கொடுகடன் தாராளமாகக் கிடைக்கத்தக்கதாக இருந்தமையுமே இதற்கான காரணமாகும். 1994/95 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் முன்னைய பெரும்போகத்தினைவிட 26 சதவீதத்தினால் அதிகரித்தன. இதேபோன்று 1995 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்களும் 14 சதவீதத்தினால் அதிகரித்தன.

நெல்லின் அதியுயர் உற்பத்தி காரணமாகவும், கோதுமை மாவுக்கான உதவிக் கொடுப்பனவினைத் தொடர்ந்து கோதுமையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையாலும் அரிசியின் விலை வீழ்ச்சியடைந்து சென்றபோது, தனது நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டிருந்த நெற் சந்தைப்படுத்தும் சபை உத்தரவாதக் கொள்வனவு விலைகளில் வேளாண்மையாளர்களின் வெளியீட்டினைக் கொள்வனவு செய்வதற்காக வங்கித் தொழில் முறையிலிருந்தான கொடுகடன் வசதிகளுடன் மீண்டும்

நடவடிக்கைகளை ஆரம்பித்தது. 1994 இல் கொள்வனவு செய்த 120,000 மெற்றிக் தொன்களுக்கு எதிராக 1995 இல் நெற்சந்தைப்படுத்தும் சபை 282,000 மெற்றிக் தொன்களைக் கொள்வனவு செய்தது. மொத்த நெல் வெளியீட்டில் நெற்சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவுகள் கிட்டத்தட்ட 10 சதவீதமாக இருந்ததுடன் சந்தையில் ஓரளவு தாக்கத்தினையே கொண்டிருந்தது. இதன்படி 1995 இல் கோதுமை மாவுக்கான உதவிக் கொடுப்பனவின் குறைப்பானது வேளாண்மையாளர்களுக்கான வரவேற்கத்தக்க ஊக்குவிப்பாக இருந்தது.

1995 இல் சீனி உற்பத்தி சிறிதளவான வீழ்ச்சியினைக் காட்டியது. மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, சோளம், குரக்கன் என்பனவற்றையும் உள்ளடக்கிய உணவுப்பயிர்கள் துறை 1995 இல் கலப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்தது. பயிர் மதிப்பீட்டின் படி உருளைக்கிழங்கு, சோயாஅவரை, எள்ளு என்பனவற்றின் வெளியீடு கணிசமான மேம்பாட்டினைக் கொண்டிருந்தது. மேம்பட்ட விளைச்சல் மற்றும் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக உருளைக்கிழங்கு அறுவடை 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1995 இல் பெரிய வெங்காய உற்பத்தி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1994 இன் அதிகரித்த அறுவடையின் பின்னர் வேளாண்மையாளர்களினால் எதிர்கொள்ளப்பட்ட குறிப்பாக அவர்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தலில் காணப்பட்ட பிரச்சினைகள் இப்பயிர்ச் செய்கையினை ஊக்கமிழக்கச் செய்துள்ளன.

1995 இல் மீன்பிடித்துறையின் கூட்டிய பெறுமதி 4.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இது முக்கியமாக கடல் மற்றும் நன்நீர் உற்பத்தியினையும் இறால் உற்பத்தியின் அதிகரிப்பையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

### சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்


சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் துறையில் முக்கிய பங்கினை வகிக்கும் இரத்தினக்கல் அகழ்வு 1995 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது. எனினும் ஏனைய அகழ்வு நடவடிக்கைகள் சிறப்பான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. 1995 இல் முழுமையாக இத்துறை 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அருங்கற்களும் அவை சார்ந்த கற்களின் ஏற்றுமதி வருவாய் சிஎஉ நியதிகளில் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### தயாரிப்பு

வழங்கல் பக்கத்தில் 1995 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி தயாரிப்புத்துறையின் வளர்ச்சியிலிருந்தே பெறப்பட்டது. முதன்மையாக இவ்வளர்ச்சி தொழிற்சாலைக் கைத்தொழில் களிலிருந்து பெறப்பட்டதாகும். அண்மைக்கால தாராளமயப்படுத்தல் நடவடிக்கைகளினால் தயாரிப்புத்துறை நேரடியாகவே நன்மைகளைப் பெற்றுக்கொண்ட வேளையில் இத்துறையின் இயக்க விசையானது வளர்ச்சிச் செயல்முறையினைத் தாங்கிப்பிடித்ததோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு எதிராக பொருளாதாரம் தாக்குப் பிடிக்கவும் உதவியது. முன்னைய ஆண்டின் 8.8 சதவீத வீழ்ச்சிக்குப் பின்னர் 1995 இல் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இவ்வளர்ச்சியானது உள்நாட்டுச் சந்தை மற்றும் ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் காணப்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வளர்ச்சியினால் ஆதரவு வழங்கப்பட்ட தயாரிப்புத்துறை 9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த பொருளாதார வளர்ச்சியில் 31 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது.

புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகை 14.8 சதவீதத்தினாலும் உணவு, குடிபானம், புகையிலை 10.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து 1995 இல் கைத்தொழில் வெளியீட்டில் 79 சதவீதத்திற்கு வகைகூறின. 1995 இல் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்களின் வெளியீடு 1994 இன் 9.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. வளர்ச்சி வீதத்தில் காணப்பட்ட இவ்வீழ்ச்சிக்கு பொதுவான பேணலுக்காக தூய்மி மூடப்பட்டமை காரணமாகக் கூறப்படுகின்றது. 1995 இல் தனியார் துறைக் கைத்தொழில்களின் வெளியீடு 12 சதவீதத்தினால் அதிகரித்து கைத்தொழிலின் மொத்த கூட்டிய பெறுமதியின் 91 சதவீதத்திற்கு வகைகூறியது.

கொள்கைப் பக்கத்தில் கைத்தொழில் துறைக்கு தாராளமயமாக்கப்பட்ட கொள்கைகளினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளினாலும் ஆதரவு வழங்கப்பட்டது. இவற்றுடன் அரசுடைமைத் தொழில் முயற்சிகளின் படிப்படியான தனியார் மயப்படுத்தலானது தனியார்




துறையை கைத்தொழில் நடவடிக்கைகளில் இயக்கவிசை கொண்ட சக்தியாக மாற்றியுள்ளது. 1995 நவம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கைத்தொழில் மயமாக்கல் உபாயமானது மூலவள ஒதுக்கலில் காணப்படும் திரிபுகளை ஒழித்து பணவீக்கத்தைக் குறைக்கும் நோக்கில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார முகாமைத்துவத்தின் ஊடாக விரைந்த கைத்தொழில் மயமாக்கலுக்கு சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழலை உருவாக்குவதை வலியுறுத்துகின்றது.

சிறிய நடுத்தர அளவு கொடுகடன் திட்டத்தின் கீழான நடுத்தரகால நீண்டகால, கொடுகடன் தேசிய அபிவிருத்தி வங்கியினால் வழிப்படுத்தப்பட்டு 1994 இலும் தொடர்ந்தது. இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினாலும் கூட்டாக நிதியிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக அபிவிருத்தி நிதிக் கூட்டுதாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் என்பன கடன் மற்றும் பங்குடமை வடிவில் கைத்தொழில் முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் நேரடி நிதி வசதிகளை வழங்கின. எனினும் கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்கள் 1995 இறுதியில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததோடு இரண்டு அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் ஐ.அ.டொலர் 580 இலட்சத்தினைக் கொண்ட புதிய கடன்கள் இரண்டிற்காகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் கைத்தொழில் துறைக்கான வங்கிக் கடன் 25 சதவீதத்தினால் அதிகரித்து 1994 இன் முதல் ஒன்பது மாதங்களின் 6 சதவீத

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 செத்தெம்பர் இறுதியில் ரூ. 24 பில்லியனை எய்தியது.

### கட்டடவாக்கம்

கடந்த அண்மைக் காலங்களில் மிகச் சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டதுறையாக விளங்கிய கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கம் 1995 இல் ஓரளவு மெதுவடைந்தது. வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சல்களில் காணப்பட்ட வீழ்ச்சியானது கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் கட்டுமான நடவடிக்கைகளைமெதுவாக்கிய வேளையில் சீமெந்துக்கான தற்காலிகத் தட்டுப்பாடும் அதிகரித்த விலைகளும் குறிப்பாக வீடமைப்பு நடவடிக்கைகளில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. அரசினால் அதிகரித்த நிதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் வீதி அமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன.

### பணிகள்

மின்வலு, வாயு, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல், மொத்த மற்றும் சில்லறை விற்பனை, வங்கித் தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் வதிவிட உடைமைகள், பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் ஏனைய அனைத்துப் பணிகளையும் உள்ளடக்கிய பணிகள்துறை விரைந்து வளர்ச்சியடையும் பொருளாதாரங்களில் அவதானிக்கப்படுவதுபோல் கடந்த அண்மைக்காலத்தில் விரைந்த வளர்ச்சித் துறையொன்றாக விளங்கியது. 1995 இல் இத்துறை 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பொருளாதார வளர்ச்சியில் 44 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு சந்தைசார் வர்த்தகத்தின் அதிகரித்த கூட்டிய பெறுமதி இறக்குமதி சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியில் காணப்பட்ட கடுமையான வீழ்ச்சியினால் ஓரளவுக்கு எதிரீடுசெய்தமையின் காரணமாக 1995 இல் இத்துறை 3.6 சதவீதத்தினால் மட்டுமே வளர்ச்சியடைந்தது. மின்சக்தி, வாயு, நீர் வழங்கல், சுத்திகரிப்புப் பணிகள்துறை 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தொடர்பூட்டல் பணிகள் 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் பொருளாதாரத்தில் இயக்கவிசைமிக்க முறையொன்றாகவும் விளங்கியது. ஏற்றுமதிகளிலும் மாற்றுக் கப்பலேற்றலிலும் காணப்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் துறைமுகப் பணிகள் 7 சதவீதத்தினால் அதிகரித்தன.

புதிய கருவிகளுடனும் நவீன வசதிகளுடனும் வங்கித் தொழில் பணிகளின் மேலதிக விரிவாக்கமானது வர்த்தக வங்கித் தொழில்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவேளையில் புதிய வர்த்தக வங்கிகள் திறக்கப்பட்டமையானது இலங்கையின் நிதியியல் முறையில் அதிகரித்த நம்பிக்கையைக் குறித்துக்காட்டுவதாக இருந்தது. பங்குச் சந்தை நடவடிக்கைகள் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டமையினால் தரகு நிறுவனங்களின் கூட்டிய பெறுமதி 1995 இல் வீழ்ச்சியடைந்தது. 1995 இல் காப்புறுதித்துறை அதிக போட்டித்தன்மையைக் கொண்டதாகவும் இயக்க விசையினைக் கொண்டதாகவும் விளங்கியது.

### மொத்த உள்நாட்டுச் செலவும் சேமிப்புக்களும்

மொத்த உள்நாட்டுச் செலவினால் (மொ.உ.செ) அளவிடப்பட்ட மொத்த கூட்டுக்கேள்வி 1995 இல் 12 சதவீதத்தினால் ரூ. 7,257,100 இலட்சத்திற்கு அதிகரித்தது. நுகர்வுச் செலவு 14 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் முதலீட்டுச் செலவு 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் நுகர்வுச் செலவு 12.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் பெயரளவு வருமானங்களின் வளர்ச்சியினைவிட சிறிதளவு குறைவான வீதமாகக் காணப்பட்டதோடு இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதனது விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1994 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் அரசின் நுகர்வுச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. பாதுகாப்புக்கான பொருட்கள் பணிகளின் கொள்வனவில் அதிகரித்த செலவினை இது பிரதிபலிப்பதாக இருந்தது.


இதேவேளையில் வெளிநாட்டுத் தனியார் மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட மெதுவான தன்மையின் காரணமாகவும், தொழிலாளர் அமைதியின்மை, நிச்சயமற்ற பாதுகாப்பு நிலைமைகள், வீழ்ச்சியடைந்த உள்நாட்டு மூலதனச் சந்தை என்பனவற்றின் காரணமாக முதலீட்டுச் சூழ்நிலை மோசமடைந்ததன் விளைவாக முதலீட்டுக் கேள்வி வீழ்ச்சியடைந்தது. மெக்சிக்கோ நெருக்கடியைத் தொடர்ந்து செலாவணி மற்றும் மூலதனச் சந்தையின் பெரும்பாலும் மாறுபடும் தன்மையின் காரணமாக இலங்கைக்கான வெளிநாட்டு மூலதனம் ஓரளவு பாதிக்கப்பட்டது. இதற்கான காரணம் என்னவெனில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் மூலதனச் சந்தைகளிலிருந்து

நகர்ந்தமையாகும். தனியார் முதலீடு மொ.உ.உ. இன் விகிதமாக கருதப்படுமிடத்து எயர்லங்கா கொள்வனவு செய்த வானூர்திகளை நீக்குமிடத்து 1.2 சதவீதப்புள்ளிகளால் குறைவடைந்தது. இக்குறைவானது முக்கியமாக வெளிநாட்டு தனியார் மூலதன உட்பாய்ச்சல் குறைந்தமையாலே ஏற்பட்டது.

1995 இல் வெளிநாட்டுக் கேள்வி உறுதியாக இருந்தது. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் சிஎஉ நியதிகளில் 10 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விகிதமொன்றாக 1994 இன் 34 சதவீதத்திலிருந்து 36 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1995 இல் பெயரளவு நியதிகளில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 16 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பொருளாதாரத்தின் சேமிப்பு வீதங்களின் கூட்டுக் குறிகாட்டி ஒன்றாகிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் ஒன்றாக சேமிப்புக்கள் 15.5 சதவீதத்திற்கு அதிகரித்தன. தனியார் பணவனுப்பல்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டு வருமான வெளிப்பாய்ச்சல்களுக்கும் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் பெறப்படும் தேசிய சேமிப்புக்களின் மட்டம் 1994 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.1 சதவீதத்திலிருந்து 1995 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.3 சதவீதமாக விளங்கிய தனியார் பணவனுப்பல்கள் உள்நாட்டுச் சேமிப்பு மட்டத்திற்கு மேலாக தேசிய சேமிப்பு மட்டத்தினைக் கணிசமாக உயர்வடையச் செய்தமை முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விடயம் ஒன்றாகும். எனவே 1995 இல் முதலீட்டுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சேமிப்புக்களின் பயன்பாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 4.2 சதவீதமாக இருந்தது.

வரைபடம் 1.4
விலைகளின் மாற்றங்கள்




## விலைகள்

1995 இல் தாழ்ந்த பணவீக்கச் சூழலில் மிதமான உயர் பொருளாதார வளர்ச்சிவீதமொன்று எய்தப்பெற்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (கொநுவிசு) அளவிடப்பட்டவாறான பணவீக்க வீதம் 1995 இல் 7.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதிஉச்சமட்டமான 1990 இன் 21.5 சதவீதத்திலிருந்து கடந்த ஆண்டுக் காலப்பகுதியில் பணவீக்கம் வீழ்ச்சி அடைந்து சென்றுள்ளதையும் 1995 ஆம் ஆண்டானது 1987 இலிருந்து ஒற்றைப்புள்ளி அதிகரிப்பினைப் பதிவு செய்த தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளல் நன்று. பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் மொத்த தேசிய உற்பத்தி உட்கிடை விலைச்சுருக்கி போன்ற கிடைக்கத்தக்கதாக உள்ள ஏனைய மொத்த கூட்டுவிலைக் குறிகாட்டிகளும் பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டதை வெளிப்படுத்தி உள்ளன. ஆண்டுச் சராசரி பணவீக்க வீதத்தின் வீழ்ச்சியானது அடிப்படை உணவு விடயங்களின் மேம்பட்ட வழங்கல், இறக்குமதித் தீர்வைகளின் குறைப்பு நுகர்வுப் பொருட்களுக்கான மேம்பட்ட விநியோக வலையமைப்பு, குறிப்பாக அரசதுறை வர்த்தக நிறுவனங்களினால் பருவகால தளம்பல்களை மிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட உறுதியான வர்த்தகக் கொள்கைகள் 1994 இன் பிற்பகுதியில் கோதுமை மா, பாண், மண்ணெண்ணெய் என்பவற்றின் முக்கிய நிருவகிக்கப்பட்ட விலைகள் குறைக்கப்பட்டதன் தாக்கம் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும். சாதகமான வானிலைத் தன்மைகளின் காரணமாக நெல், தேங்காய், வெங்காயம் போன்ற முக்கிய வேளாண்மைப் பொருட்களின் வழங்கலின் அதிகரிப்பு மற்றும் பற்றாக்குறை நிலவும் காலங்களில் முக்கிய உணவு விடயங்களின் இறக்குமதி என்பன இவ்வாண்டில் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்திய காரணிகளாகும். இதன்படி ஆண்டு இறுதியில் பொதுவாக அவதானிக்கப்படும் அதிகரித்த விலைகளுக்குப் பதிலாக மிதமான விலை அதிகரிப்புக்கள் மட்டுமே காணப்பட்டன. 1994 இன் வீழ்ச்சிக்குப் பின்னர் 1995 இறுதியில், திசெம்பரில் இருந்து திசெம்பர் வரை என்ற அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 11.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

இவ்வாண்டுப் பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நடத்தை பருவகாலத் தன்மைகளைப் பிரதிபலித்தது. வேளாண்மை


உற்பத்திகளின் பருவ காலத் தன்மைக்கு இசைந்து செல்லும் வகையில் இச்சுட்டெண் பெப்புருவரி மார்ச்சுக் காலப் பகுதியிலும் (பெரும்போக அறுவடை) மீண்டும் ஓகத்து-செப்தெம்பர் காலப் பகுதியிலும் (சிறுபோக அறுவடை) வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் நிருவகிக்கப்பட்ட விலைக் குறைப்புக்களின் தாக்கத்தின் படிப்படியான காரணியகல்வியினதும் கோதுமை உதவிக் கொடுப்பனவு குறைக்கப்பட்டமையினாலும் 1995 செப்தெம்பலிருந்து இச்சுட்டெண் படிப்படியான அதிகரிப்பைப் பதிவு செய்தது.

முதலாந்தரச் சந்தை மட்டங்களில் விலைகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச் சட்டெண் 1994 இன் 5.0 சதவீதத்திலிருந்து 1995 இல் 8.9 சதவீதத்திற்கு விலை அதிகரிப்பில் விரைவொன்றைக் காட்டியது. இவ்வாண்டில் முக்கிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்புக்களுக்கு இச்சுட்டெண்ணின் பாரிய உயர்வினை இது பிரதிபலிப்பதாகவுள்ளது. 1994 இன் வீழ்ச்சியைத் தொடர்ந்து 1995 இல் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பு 17 சதவீதமாக இருந்தது.

### கூலிகள்

1995 இல் அரசதுறை ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும் கணிசமான கூலி அதிகரிப்புக்களை அனுபவித்தனர். மிதமான பணவீக்கத்தினால் கூலி மாற்றங்கள் சுருக்கமடைந்த போதிலும் பல துறைகளிலும் ஊழியர்கள் உண்மைக் கூலிகளில் அதிகரிப்பை அனுபவித்தனர்.

இவ்வாண்டில் பலவகை ஊழியர்களின் சம்பளங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. நன்கமைந்த தனியார்துறையில் கூலிச்சபைகள் பல அவற்றினது ஆகக் குறைந்த கூலிகளை மீளாய்வு செய்தன. முறைசாராத் துறையில் கட்டட நிருமாணம், சிறு உடைமையாளர் பயிர்ச்செய்கை போன்ற பல நடவடிக்கைகளின் பெயரளவுக் கூலிகள் பணவீக்க வீதத்தினைவிட விரைவாக அதிகரித்ததோடு உண்மைக் கூலிகளில் அதிகரிப்பைக் கொண்டிருந்தன.



வரைபடம் 1.5
கூலிவீதச் சுட்டெண்கள்
(1990 = 100)

1995 ஜனவரி 1ஆம் நாளிலிருந்து பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டு மிகக் காலங்கடந்த சீராக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இது 1995 இல் அரசதுறை சம்பள அமைப்பில் மிகக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியொன்றாக விளங்கியது. ஜனவரியில் ஏனைய பல தரங்களினது சம்பள அளவுகளும் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. பொறியியல், மிருக வைத்தியம் மற்றும் வேளாண்மை போன்ற பணிகளுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் படி யூலையிருந்து இதற்கும் சமமான முகாமைத்துவப் பணிகளுக்கும் விரிவாக்கப்பட்டு மேலும் திருத்தங்கள் 1995 நவெம்பரிலும் மேற்கொள்ளப்பட்டன.

அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள அளவுகளின் மீளாய்வானது 1995 இல் அவர்களது பெயரளவுக் கூலிகளை கணிசமான 27.7 சதவீதத்தினால் உயர்வடையச் செய்ததோடு உண்மைக்கூலிகளின் 18.6 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1995 இல் இந்த வகையினருள் நிறைவேற்றுத்தரமல்லா அலுவலர்களின் கூலிகள் 8.2 சதவீதத்தினாலும் சிற்றூழியர்களின் கூலிகள் 7.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன.


சுறுசுறுப்பாக இயங்கும் 34 கூலிச் சபைகளில் 22 கூலிச்சபைகள் கீழ்மட்ட ஆகக்குறைந்த சம்பளத்தை ரூபா 2,000 த்திற்குக் கொண்டுவரும் நோக்கில் அவர்களால் உள்ளடக்கப்பட்ட வர்த்தகங்களின் ஆகக்குறைந்த கூலியை உயர்த்தின. இந்த நிகழ்வுகளுக்கு மேலதிகமாக 1994 இன் 20 உடன்படிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 1995 இல், மொத்தம் 27 கூட்டு உடன்படிக்கைகள் முடிவு செய்யப்பட்டன.

கூலிச் சபைகளின் கீழுள்ள தொழிலாளர்களின் பொதுவான ஆகக்குறைந்த கூலிவீதச்சுட்டெண் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது. வாழ்க்கைச் செலவுப்படி நிலைப்படுத்தப்பட்டதனால் பொதுவான ஆகக்குறைந்த கூலி வீதச்சுட்டெண்ணின் அதிகரிப்பு மிகப்படுத்தப்பட்டது. வேளாண்மைத்

தொழிலாளர்களின் கூலிகள் 1.1 சதவீதத்தினால் அதிகரித்ததன. கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தில் உள்ள தொழிலாளர்கள் 1995 இல் உயர்ந்த 16.4 சதவீத கூலி அதிகரிப்பைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாண்டில் பணிகளில் உள்ள தொழிலாளர்கள் 5.9 சதவீத கூலி அதிகரிப்பைப் பெற்றுக் கொண்டனர்.

## தொழில் நிலை

கிடைக்கத்தக்கதாக உள்ள தகவல்களின் அடிப்படையில் 1995 இல் தொழில் உருவாக்கம் முன்னைய ஆண்டினைப் போலவே காணப்பட்டது. 1994 இல் பொருளாதாரம் 89,000 புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கியது. தொழில் சந்தையில் புதிதாக நுழைந்த 60 சதவீதம் வரையிலானவர்களை பொருளாதாரத்தினால் ஈர்த்துக்





கொள்ள இயலுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்களில் மூன்றிலொரு பங்கிற்கு முதலீட்டுச் சபை கைத்தொழில் வகை கூறின. தொழில்வாய்ப்பின்மை வீதம் 1994 மூன்றாம் காலாண்டில் 13.7 சதவீதத்திலிருந்து 1995 மூன்றாம் காலாண்டில் 12.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

தனிப்பட்ட பணிகள், வர்த்தகம் மற்றும் உணவகம் தவிர்ந்த ஏனைய முக்கிய அனைத்துத்துறைகளும் 1995 இன் தொழில் வாய்ப்புப் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. வேளாண்மை, கால்நடை மற்றும் மீன்பிடித்துறையின் தொழில் நிலை 7 சதவீதத்தினால் அதிகரித்து 1994 இல் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியினை நேர்மாறாக மாற்றியது. தயாரிப்பு நடவடிக்கைகளின் தொழில்நிலை 1994 இன் 4 சதவீதமிதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தினால் அதிகரித்தது.

வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்கான தொழிலாளர் வெளிப்பாய்ச்சல் தொழிற் சந்தையில் தொழில் வாய்ப்பின்மைப் பிரச்சினையை தொடர்ந்தும் இலகுபடுத்துவதற்கு உதவியது. 1995 இல் மொத்தம் 170,000 ஆட்கள் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டதாக மதிப்பிடப்பட்டதுடன் 1994 இற்கு மேலாக 5.2 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலிப்பதாக இருந்தது. இதில் பெரிய பாகமொன்று, கிட்டத்தட்ட 66 சதவீதம் தேர்ச்சியற்ற தொழிலாளர்களாவர். மத்திய கிழக்கு நாடுகளலல்லாத சிங்கப்பூர், மாலைதீவுகள், இத்தாலி போன்ற நாடுகளிலும் ஊழியர்களுக்கான கேள்வி குறிப்பாக வீட்டுப்பணிப்பெண்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதை தரவுகள் வெளிப்படுத்துகின்றன. எனினும் இந்த நாடுகளில் அண்மைக் காலங்களில் சம்பளங்கள் கூலிகள் என்பனவற்றின் அதிகரிப்பு நிலைப்படுத்தப்பட்டதன் மத்தியிலும் மொத்த வெளிச்செல்லலில் மிகப் பெரும் பங்காகிய 92 சதவீதத்திற்கு மத்திய கிழக்கு நாடுகள் வகைகூறின. தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற விரைந்து அபிவிருத்தியடையும் ஆசிய நாடுகளிலும் தொழில் வாய்ப்புக்கள் காணப்பட்டன.

தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தும் அரசின் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் வகையில் பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலை, இறை ஊக்குவிப்புக்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் வரைச்சட்டம் மற்றும் மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் என்பன இலங்கையில் தொழில் வாய்ப்பு உருவாக்கத்துக்கு மிகவும் சாத்தியமானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக 1995 பிற்பகுதியில் சனாதிபதி பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டது.

## 1.3 இறையியற் கொள்கையும் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகளும்



1995 இல் வரவு செலவுத் திட்ட வெளிப்பாடு இறையியல் திரட்சியை நோக்கி முக்கிய முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதுடன் 1995 வரவு செலவுத்திட்ட எதிர்பார்ப்புக்களே நிறைவேற்றவில்லை. 1995 –97 இற்காக மூன்று ஆண்டுவரைச் சட்டத்தினுள் உருவாக்கப்பட்ட 1995 வரவு செலவுத் திட்ட நடைமுறைக் கணக்கினை பற்றாக்குறை யொன்றிலிருந்து மொஉஉ இன் 0.6 சதவீதத்திற்கு மிகையாக்குதல், மொத்தப் பற்றாக்குறையை மெ.உ.உ.இன் 2.5 சதவீதத்தால் குறைத்தல், வங்கி நிதியிடலை ரூ. 74,050 இலட்சத்தினால் அல்லது மொஉஉ இன் 1.1 சதவீதத்திற்குக் குறைத்தல் என்பவற்றால் 1995 இல் இறையியல் சமமின்மையில் ஓர் கடுமையான குறைப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. 1995 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டவரைச் சட்டம் அரசின் இறையியற் தொழிற்பாடுகளில் உள்ள அமைப்பு ரீதியான குறைபாடு சரிசெய்யப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தியது.

1995 இன் வரவு செலவுத் திட்டத்தில் அரசு வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையை

அட்டவணை 1.3
அரசின் இறைதொழிற்பாடுகளின் தொகுப்பு
(மொஉஉ வின் சதவீதமாக)

| | 1985 | 1990 | 1994 | 1995 தற்காலிகமான |
|---|---|---|---|---|
| மொத்த அரசிறை | 22.4 | 21.1 | 19.0 | 20.5 |
| நடைமுறைச் செலவினம் | 20.1 | 22.3 | 21.9 | 22.1 |
| வட்டி | 4.6 | 6.4 | 6.6 | 5.8 |
| சம்பளங்களும் கூலிகளும் | 4.2 | 4.9 | 5.1 | 5.5 |
| பாதுகாப்பு | 0.3 | 0.7 | 1.9 | 1.8 |
| பாதுகாப்பு அல்லாத | 3.9 | 4.1 | 3.1 | 3.7 |
| சம்பளங்கள் தவிர்ந்த பாதுகாப்பு | 2.5 | 1.4 | 2.6 | 3.4 |
| ஓய்வூதியங்கள் | 1.7 | 1.4 | 2.3 | 2.3 |
| மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்களும் | 14.0 | 8.7 | 7.0 | 6.9 |
| நடைமுறை கணக்கின் மிகை/ குறை (–) | 2.2 | -1.2 | -2.9 | -1.5 |
| வரவுசெலவு திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) | -11.7 | -9.9 | -10.0 | -8.4 |
| வரவுசெலவுத் திட்டக் குறை (பாதுகாப்பு தவிர) | -8.9 | -7.8 | -5.4 | -3.1 |
| ஆரம்ப வரவுசெலவுத் திட்டக்குறை | -7.1 | -3.5 | -3.4 | -2.6 |
| நிதியிடல் | 11.7 | 9.9 | 10.0 | 8.4 |
| வெளிநாடு (கொடைகள் உட்பட) | 6.4 | 5.7 | 3.5 | 3.3 |
| உள்நாடு | 5.3 | 4.2 | 6.5 | 5.1 |
| இதில் வங்கி | 2.9 | 0.1 | 0.2 | 1.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

குறைப்பதற்காக பல வழிமுறைகளை அறிவித்தது. எனினும் முக்கியமாக அதிகரித்த பாதுகாப்புச் செலவுகளின் நோக்கில் 1995 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் கூடிய இலட்சியத்தை கொண்டவையாக இருந்தன. அரசிறைக்குறைகளை ஆகக் குறைந்த தாக்கும் நோக்கில் 1995 இன் நடுப்பகுதியில் வருவாயை அதிகரிப்பதற்கும் செலவைக் குறைப்பதற்குமான சீராக்கல் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பாதுகாப்புத் தீர்வையை 3.5 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதத்திற்கு அதிகரித்தல், மேலதிக ரூ. 10,00 இலட்சத்திற்காக தனியார் மயப்படுத்தலை விரைவுபடுத்தல், இலங்கை மின்சபையின் மீது ரூ. 15,000 இலட்சங்கொண்ட தீர்வை விதிப்பொன்று, 10 ஆடம்பரப் பொருட்களின் மீது உற்பத்தித் தீர்வை அதிகரிப்பு, முன்னுரிமையல்லா மூலதனச் செயற்றிட்டங்களில் 10 சதவீத வெட்டு என்பவற்றை நடுவாண்டுச் சீராக்கங்கள் கொண்டிருந்தன. வரவு செலவுத்திட்ட வெளிப்பாட்டின்படி மொத்த வருவாய் 1994 இன் மொஉ உற்பத்தியின் 19 சதவீதத்திலிருந்து 1995 இல் 20.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்தச் செலவு முன்னைய ஆண்டின் உள்நாட்டு உற்பத்தியின் 29 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 28.9 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. 1995 இல் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 1.4 சதவீதப் புள்ளியினால் வீழ்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதத்தில் காணப்பட்டது. கொடைகளின் பின்னான மொத்தப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் வங்கி நிதியிடலைக் குறைக்கும் இலக்கு அடையப்படவில்லை. செலவுப் பக்கத்தில் தொடர்ச்சியான அமைப்புக் குறைபாடுகளும், வெளிநாட்டு நிதியிடல் மற்றும் தனியார் மயமாக்கல் மூலதனப் பெறுகைகள் குறைவடைந்தமையுமே இதற்கான காரணமாகும். மாறாக 1995 இல் வங்கி நிதியிடல் ரூ. 70,650 இலட்சத்தினால் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஆண்டின் முதலரைப்பகுதியில் அரசின் காசுப்பற்றாக்குறை முழுமையாகவே வங்கித் துறையல்லா மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. இரண்டாவது அரைப் பகுதியில் இறைப்பற்றாக்குறை விரிவடையத் தொடங்கியது. இக்காலப் பகுதியில் அரசாங்கத்தின் அதிகரித்த மூலவளத் தேவைப்பாடுகள் தொடக்கத்தில் வங்கியில்லா சந்தைக்கடன்பாடுகளுடாக எதிர்கொள்ளப்பட்டது. இதனோடிணைந்து தற்காலிக திரவத் தன்மைப் பற்றாக்குறையொன்று குறுங்கால வட்டி வீதங்களின் அதிகூடிய மாறுபடும் தன்மைக்கு இட்டுச் சென்றது.

1995 இன் இறுதியளவில் அரசு அதிகரித்த வங்கி நிதிகளை நாடியது. இது வட்டிவீதங்களின் அழுத்தத்தைக் குறைத்ததோடு தனியார் முதலீட்டின் உடனடி வெளியேற்றத்தையும் குறைத்தது. எனினும் பணநிரம்பலின் மீது விரிவாக்கத் தாக்கித்தினைக் கொண்டிருந்தது.

### அரச தொழில் முயற்சிகளின் சீர்திருத்தங்கள்

இலங்கையில், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை அகற்றும் அரச தொழில் முயற்சிகளின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் 1980 இன் பிற்பகுதியில் ஆரம்பமானது. அரச தொழில் முயற்சிகளின் சீர்திருத்தச் செயல்முறை 1995 மார்ச்சில் புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனரீதியாக அமைப்பாகிய அரச தொழில் முயற்சிகளின் சீர்திருத்த ஆணைக்குழுவின் (அதொசீஆ) கீழ் கொண்டுவரப்பட்டது. வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூ. 40,000 இலட்சத்திற்கெதிராக இச்சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் 1995 இல் ரூ. 30,010 இலட்சத்தை உருவாக்கியது. (கொழும்பு வாயுக்கூட்டுநிலையம் ரூ. 19,980 இலட்சம், மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கூட்டுநிலையம் ரூ. 3,710 இலட்சம், பெருந் தோட்ட கூட்டு நிலையங்கள் ரூ. 5,950 இலட்சம், ஏனையவை ரூ. 370இலட்சம்) மேலும் இவ்வாண்டில், அதொசீ ஆணைக்குழு ஏனைய பல தொழில் முயற்சிகளையும் மீளமைப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது. 1980 இன் பிற்பகுதியிலிருந்து கிட்டத்தட்ட அறுபது அரச தொழில் முயற்சிகள் அகற்றப்பட்டோ அல்லது விற்பனை செய்யப்பட்டோ இருந்ததுடன், 1995 இறுதியளவில் ரூ. 156,500 இலட்சம் கொண்ட தொகையொன்று சேகரிக்கப்பட்டுள்ளது.

## 1.4 பன்னாட்டு சூழலும் வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகளும்

### பன்னாட்டுச் சூழல்

1995 இல் செலாவணி மற்றும் மூலதனச் சந்தைகளில் மாறுபடும் தன்மை இருந்தபோதிலும், உலக பொருளாதார வளர்ச்சி திருப்திகரமாகப் பேணப்பட்டமை, பணவீக்கக் குறைப்பு மற்றும் நீண்டகால வட்டிவீதங்களில் வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக பன்னாட்டுச் சூழலில் உறுதியான அபிவிருத்திகள் காணப்பட்டன. 1995 இல் சராசரி 2.4 சதவீத பணவீக்க வீதத்துடன் கைத்தொழில் நாடுகளின் உண்மை வெளியீடு 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1994 இன் கிட்டத்தட்ட 50 சதவீதத்திலிருந்து 19.5 சதவீதத்திற்கு பணவீக்கம் கடுமையாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் 5.8 சதவீத கணிசமான உயர் வளர்ச்சி வீதத்தினை எய்தின. குறிப்பாக ஆசிய நாடுகள் 1995 இல் சிறப்பாகச் செயலாற்றியதுடன் மதிப்பிடப்பட்ட சராசரி 8.4 சதவீத வளர்ச்சியையும் சராசரி 11 சதவீத பணவீக்கத்தையும் கொண்டிருந்தன.

என்றுமில்லாத தாழ்ந்த மட்டத்தில் ஐ.அ.டொலர் ஒன்று 87 யென்னுக்கு வீழ்ச்சியடைந்தமையினால் ஆண்டின் தொடக்கத்தில் செலாவணி வீதங்களில் காணப்பட்ட அதிகூடிய மாறுபடும் தன்மை யப்பானினதும் ஏனைய நாடுகளினதும் தலையீட்டால் தணிக்கப்பட்டது. ஐ.அ. நாடுகளுக்கும் யப்பானுக்கும் இடையேயான வர்த்தக சமமின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மேம்பாடொன்று காணப்பட்டது. முக்கிய நாணயங்களுக்கிடையான செலாவணி வீதங்கள் குறிப்பாக ஐ.அ. டொலர் டியூச் மாக்கு, யப்பானிய யென் என்பனவற்றிற்கிடையேயான செலாவணி வீதங்கள் ஆண்டின் நடுப்பகுதியில் உறுதிப்படுத்தப்பட்டன. ஆசிய நாணயங்களுக் கிடையில் ஓகத்திலிருந்து இந்திய ரூபா கணிசமான அளவு தேய்வடைந்தது.

இதேவேளை யப்பானும் சேர்மனியும் அவர்களின் மந்த நிலைகளிலுள்ள பொருளாதார தொழிற்பாட்டிற்கு ஓர் உந்து சக்தியைக் கொடுக்கும் நோக்கில் இவ்வாண்டில் அவற்றின் கழிவு வீதங்களைக் குறைத்தன. 1995 இல் ஐ.அ. டொலர் பிரான்சிய பிராங், இசுடேர்லிங் பவுண்டுகள் ஆகிய முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலண்டன் வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதம் மேம்பாடடைந்தது.

1995 இல் உலகளாவிய வர்த்தகம், முன்னைய ஆண்டின் 9 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 8.1 சதவீதத்தால் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்தான ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டைப்போலவே 12 சதவீத வளர்ச்சியைப் பேணின. 1995 இல் கைத்தொழில் நாடுகளின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் ஒவ்வொன்றும் 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதேவேளை, பல அத்தியாவசிய வேளாண்மைப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியால் திரண்ட உலகளாவிய பற்றாக்குறைகளால் விசேடமாக கோதுமைத் தானியம், அரிசி, சீனி, பால் உற்பத்திகள் என்பனவற்றின்

விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. ஐ.அ. டொலர் நியதிகளில் தயாரிக்கப்பட்ட பொருட்களும் வலுவல்லா முதன்மைப் பண்டங்களும் முறையே 10.2 சதவீதத்தாலும் 8.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1995 இல் எண்ணெய் விலைகள் 9.5 சதவீதத்தினால் அதிகரித்தன. இது 1995 இல் ஐ.அ. டொலர் தேய்வடைந்தமையின் தாக்கத்தைப் பிரதிபலித்தது.

இறுதியாக நடைபெற்ற உருகுவே வட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளால் உதவப்பட்ட உலகளாவிய வர்த்தகத்திலான வளர்ச்சி 1995 சனவரியின் முற்பகுதியில் நிறுவப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தினூடாக (உவதி) அமுல்படுத்தப்பட விருக்கின்றது. உருகுவே வர்த்தக வட்டம் அதிகுறைந்த திரிபுகளுடன் உலகளாவிய வர்த்தக முறையுடன் இணங்கிச் செல்லும் வகையில் ஓர் முக்கிய நடவடிக்கையைத் தெரிவித்தது. பணிகள், அறிவுச் சொத்து உரிமைகள், வேளாண்மை, புடவைகள் ஆடைகள் என்பனவற்றினை உள்ளடக்கிய பன்னாட்டு வர்த்தகத்தின் அனைத்துத்துறைகளையும் பலதரப்பு வர்த்தக முறையின் கீழ் கொண்டு வந்தது. 2005 ஆம் ஆண்டளவில் பல்நூற் பொருட்களின் இணக்கத்தின் கீழ் அனுமதிப் பங்குகளை கட்டம் கட்டமாக்குதல், அதிகூடிய தீர்வை வெட்டுக்கள், தீர்வையில்லாத் தடைகளின் நீக்கம் என்பன அண்மிய எதிர்காலத்தில் அதிபோட்டித் தன்மையுடைய வர்த்தக சூழலை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியமும் அதன் உறுப்பு நாடுகளுக்கிடையே சகல பொருளாதார தடைகளையும் அகற்றும் இறுதி இலக்கை நோக்கி அதன் நடவடிக்கையைத் தொடர்ந்தது. ஆசியான் நாடுகளையும் சார்க் நாடுகளையும் உள்ளடக்கிய பிராந்திய வர்த்தகக் கூட்டுக்களால் அவர்களது தொடர்பு தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டது

1994 இன் பிற்பகுதியிலான மெச்சிக்கோவின் நிதியியல் நெருக்கடியானது புதிய சந்தைகளில் முதலீட்டாளர்களின் அவதானப் போக்கை உருவாக்கியதோடு ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளையும் பாதித்தது. பலமுதலீட்டாளர்கள் புதிய சந்தைகளிலிருந்து நன்கு நிறுவப்பட்ட ஐரோப்பிய வடஅமெரிக்க சந்தைகளுக்கு நகர்ந்தனர்.

அண்மைக் காலங்களின் உறுதியான பொருளாதாரச் செயலாற்றத்துக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவற்றில் வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் அமைப்புச் சீராக்கம் என்பனவற்றின் ஊடாக பொருளாதார மீளமைப்பு தொடர்ந்து இடம்பெறுகின்றது. எனினும் பாரிய அரசிறைப் பற்றாக்குறை மற்றும் அரசாங்களின் பகுதியளவு அரசிறை உட்படுத்தல்கள் என்பனவற்றின் ஊடாக உற்பத்தித் திறன் வாய்ந்த முதலீடுகளின் வெளியேற்றம் பல நாடுகளின் பொருளாதார செயலாற்றத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

இதேவேளை ஆசியாவின் விரைவாக வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் முக்கிய வளர்ச்சி நிலையங்களாக தொடர்ந்தும் இருக்கும் சீனா கிட்டத்தட்ட 11 சதவீத மொஉஉ வளர்ச்சியைக் கொண்டிருக்கையில் கொறியா (9.7 சதவீதம்) வியட்னாம் (9.7 சதவீதம்) மலேசியா (8.5 சதவீதம்) தாய்லாந்து (8.4 சதவீதம்) என்பன இப்பிராந்தியத்தில் விரைவாக வளர்ச்சியடையும் நாடுகளாக விளங்கின.


பன்னாட்டு பொருளாதார சூழ்நிலையிலான இம்மாற்றங்கள் 1995 இல் இலங்கையின் பொருளாதார செயலாற்றத்தில் சாதகமானதும் பாதகமானதுமான தாக்கங்களைக் கொண்டிருந்தன. அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி தயாரிக்கப்பட்ட மற்றும் வேளாண்மைப் பொருட்களின் சாதகமான விலை அதிகரிப்புகளுக்கு இட்டுச் செல்கின்றன. எனினும் அத்தியாவசியப் பண்டங்களின் அதிகரித்த விலையைப் பிரதிபலிக்கும் வகையில் வர்த்தக நியதிகள் சிறிதளவில் மேம்பாடடைந்தன.

### வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக திரண்ட மிகைகளைக் கொண்டிருந்த இலங்கையின் சென்மதி நிலுவைகள் 1995 இல் சிஎஉ 620 இலட்சம் கொண்ட திரண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தது. இது முக்கியமாக தனியார் மூலதன உட்பாய்ச்சலில் ஏற்பட்ட ஓர் வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். இருப்பினும், ஏற்றுமதிகள் சிறப்பாகச் செயலாற்றியதுடன் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன. முன்னேற்றமடைந்த ஏற்றுமதிச் செயலாற்றத்தினாலும், இறக்குமதிகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சியாலும் வர்த்தகப் பற்றாக்குறை சிஎஉ 1,680 இலட்சத்தால் அல்லது மொ.உ.உ. இன் 2.5 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது. பணிகள் கணக்கிலான ஒரு சிறிய மிகை மற்றும் அதிகரித்த தேறிய தனியார் மாற்றல் பெறுகைகளுடன் வர்த்தகக் கணக்கில் ஏற்பட்ட முன்னேற்றம் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையை 1994 இன் சிஎஉ 5,260 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,580 இலட்சங்களுக்கு குறைத்தது. மொ.உ.உ. இன் சதவீதமாக நடைமுறைப் பற்றாக்குறை 1994 இன்

Central Bank of Sri Lanka
11 JUN 2009
LIBRARY INFORMATION CENTRE
07 MAR 1997

வரைபடம் 1.8
தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுத்துறை குறிகாட்டிகள்




6.5 சதவீதத்திலிருந்து 1995 இல் 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி அநேகமான வேளாண்மை மற்றும் சில கைத்தொழில் உற்பத்திகளுக்கான முன்னேற்றமடைந்த பன்னாட்டு விலைகள், செலாவணி வீதத்தின் பெறுமானத்தேய்வு, முக்கிய பெருந்தோட்டப் பயிர்களுக்கான சாதகமான வானிலை நிலைமைகள் என்பவற்றிலிருந்து நன்மையடைந்த ஏற்றுமதிகள், 1995 இல் சிஎஉ நியதிகளில் 12 சதவீதம் வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. எனினும், இறக்குமதி வளர்ச்சி வீதம் 1994 இன் 16 சதவீதத்திலிருந்து 1995 இல் 3 சதவீதத்திற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட குறைப்பு மற்றும் நீண்டகால இறக்குமதிகளின் கேள்வியில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் காரணமாக உருவானதாகும். முக்கிய வேளாண்மை ஏற்றுமதி உற்பத்திக்கான விலை அதிகரிப்புக்களை விஞ்சும் வகையில் முக்கிய இறக்குமதிப் பண்டங்களில் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக மாற்று வீதம் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1995 இல் தேறிய மூலதனப் பாய்ச்சல்கள், 1994 இன் மட்டங்களின் அரைவாசிக்கு வீழ்ச்சியடைந்தது. 1995 இல் தேறிய அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல்கள் சிஎஉ 320 இலட்சத்திற்கு அதிகரித்தன. கொழும்பு வாயுக் கம்பனி தனியார் மயமாக்கப்பட்டதன் மூலம் சிஎஉ 250 இலட்சம் கொண்ட உட்பாய்ச்சல் ஒன்று காணப்பட்டது. எனினும், தொழிலாளர் அமைதியின்மை, உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள்

மற்றும் பாரிய மூலதனச் செயற்றிட்டங்கள் முற்றுப்பெறல் என்பனவற்றின் காரணமாக நேரடி வெளிநாட்டு முதலீடுகளும் தனியார்மயப்படுத்தல் பெறுகைகளும் அவற்றின் 1994 ஆம் ஆண்டின் மட்டத்தின் மூன்றிலொரு பங்கிற்கு வீழ்ச்சியடைந்தன. எயர் லங்காவின் மீள் தொகுதியிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியிடல் ஒழுங்குகள் குறைவடைந்தமையாலும் குறுகியகால வர்த்தகக் கடன்கள் வீழ்ச்சியடைந்தமையாலும் தனியார் கடன் மூலதன உட்பாய்ச்சல்களும் வீழ்ச்சியடைந்தன.

இதேவேளை, கொள்கைப் பக்கத்தில் பல சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டன. திறந்த வர்த்தகம் மற்றும் செலாவணி வீதத்திற்கான அரசின் தொடர்ந்த கடப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் ஆகக்கூடிய தீர்வை வீதத்தைக் குறைத்தல், தீர்வை வீதப் பிரிவுகளை மூன்றிற்குக் குறைத்தல், அவ்வப்போதைய விலக்களிப்புக்களை நீக்கல் என்பன மூலம் தீர்வை அமைப்பு இவ்வாண்டில் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டது. செலாவணி வீதம் தொடர்ந்தும் முக்கியமாக சந்தையால் தீர்மானிக்கப்பட்டதுடன் முக்கிய பேரண்டப் பொருளாதார அடிப்படைகளைப் பிரதிபலித்தது. அனைத்து நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களும் படுகடன் மீள் கொடுப்பனவுகளுக்கும் ஒவ்வொன்றாக ஆராயப்பட்ட அடிப்படையில் வெளிநாட்டிலான வெளிநாட்டு முதலீடுகள் என்பவற்றுக்குள் ரூபாவுக்கான மாற்றல் உறுதிசெய்யப்பட்டு வெளிநாட்டு கொடுப்பனவுகள் முறை தொடர்ந்து புலப்படுத்துவதாக இருந்தது.

மேம்பட்ட கொள்கைகளுடன் புதிய ஒழுங்கு முறையொன்றின் கலந்துரையாடலுக்கு புதிய நிருவாகம் எண்ணம் கொண்டமையினால் 1995 இன் முதற் காலாண்டில் பன்னாட்டு நாணய நிதியத்துடனான (பநாநி) மூன்றாவது அதிகரித்த அமைப்புச் சீராக்க வசதி (அஅசீவ) இரண்டாவது தவணைப் பணமான சிஎஉ 560 இலட்சங்களை மீளப்பெறாது காலாவதியாவதற்கு அனுமதிக்கப் பட்டது. வெளிநாட்டுத்துறை கொடுக்கல் வாங்கல்கள் 1995 இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 630 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றன. 1995 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் சிஎஉ 17,290 இலட்சமாக அமைந்து 1996 இற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 5.4 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது. பொருட்கள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களின் வீதமாக படுகடன் பணிகள் விகிதம் முன்னைய ஆண்டின் 14.3 சதவீதத்திலிருந்து 13.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

முக்கிய நாணயங்களுக்கிடையேயான செலாவணி வீதங்களிலான விரைவாக மாறுபடும் தன்மை மற்றும் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட மொத்தப் பற்றாக்குறையின் மத்தியிலும் இலங்கை ரூபா இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக் கெதிராக 7.5 சதவீதத்தினாலும் சிஎஉ இற்கெதிராக 9.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுக்கிடையே யான 5.5 சதவீத பணவீக்கத்துடன் சார்புரீதியில் புள்ளிக்குப்புள்ளி 11.5 சதவீத பணவீக்கத்துடன் உண்மை பயன்தரு செலாவணி வீதத்தினால் அளவிடப்பட்டவாறான பெயரளவு செலாவணி வீதத்தின் பெறுமானத்தேய்வு நாட்டின் பன்னாட்டு போட்டித்தன்மையைப் பேணுவதற்குப் போதுமானதாக இருந்தது.


**சுற்றுலா**

1995 இல் சுற்றுலாத்துறை ஓர் முக்கிய பின்னடைவால் பாதிப்புற்றது. மூன்றாம் காலாண்டின் இறுதி வரைக்கும் 5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த சுற்றுலாத்துறை நாலாம் காலாண்டில் 17 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டினை முழுமையாக நோக்குகையில் சுற்றுலா வருகைகள் 1 சதவீதத்தாலும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 7 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

**1. 5. நாணயத்துறை அபிவிருத்திகள்**

ஆண்டின் பின்னரைப் பகுதியில் தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு விரைவடைந்தமையின் முக்கிய காரணமாக 1995 இல் நாணய விரிவாக்கம் உயர்வாக விளங்கியது. இது வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் வெகுவாகக் குறைவடைந்தும் உள்நாட்டு மூலதனச் சந்தை மந்தமாகவும் காணப்பட்ட சூழ்நிலையில் இடம்பெற்றது. அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் ஆகிய இரண்டும் அதிகரித்த வங்கிக் கொடுகடனை நாடின. இதன்விளைவாக 1995 இல் விரிந்த பண நிரம்பல் $M_2$ நியதிகளில் அளவிடப்பட்ட பண நிரம்பல் 1994இன் 19.2 சதவீதத்தினால் விரிவடைந்தது. உண்மையான மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் 5 சதவீதமாக இருந்தமையின் காரணமாக இது நாணய வளர்ச்சியில் உயர்ந்த வீதமாகக் கருதப்பட்டது. எனினும், குறுகிய பண நிரம்பல் $M_1$ முன்னைய ஆண்டின் 18.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் 6.7 சதவீதத்தினால்

வரைபடம் 1.9
நாணயக் கூட்டுக்களின் மாற்றங்கள்
(புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றங்கள்)




மட்டுமே வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாக இருந்தது.

$M_1$ இனைவிட $M_2$ விரைவாக வளர்ச்சியடைந்தமையானது பொதுமக்களின் சொத்துப் பட்டியலின் உள்ளமைப்பு வட்டி உழைக்காத நிலுவைகளிலிருந்து அந்த நேரத்தில் உயர்ந்த சாதகமான உண்மை வீதங்களைக் கொண்ட வட்டி உழைக்கும் சொத்துக்களுக்கு பெயர்ந்தமையின் விளைவேயாகும். வைப்புக்களைத் திரட்டும் முயற்சிகள் செறிவாக்கப்பட்டமை, புதிய நிதியியல் கருவிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பிரபல்யப்படுத்தப்பட்டமை மற்றும் வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட பணிகள் என்பன இச்செயல்முறைக்கு உதவின. தேசிய சேமிப்பு வங்கி அதன் வட்டி வீதங்களை உயர்த்துவதில் காட்டிய தாமதம் காரணமாக அதன் புதிய வைப்புக்களில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியும் பொதுமக்கள் மந்தமடைந்த பங்குச் சந்தைகளிலிருந்து தமது முதலீடுகளை வங்கித் தொழில் முறைக்கு மாற்றியமையும் இப்பெயர்ச்சிக்கு உதவின.

ஒதுக்குகளைக் குறைத்தமை மிகுந்த போட்டித் தன்மையுள்ள வங்கித் தொழில் சூழலில் புதிய வைப்புக்களைத் திரட்டுவதற்கான தீவிரமான வங்கித் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட நிலுவைகளைக் குறைத்தமை என்பவற்றினூடாக தனியார் துறை, அரசதுறை இரண்டினதும் அதிகரித்த கொடுகடன் கேள்விகளுக்கு வங்கிகள் இடமளித்தன. இதன் விளைவாக வங்கித் தொழில் முறையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 27 சதவீதத்தால் மிகக் கூடுதலாக அதிகரித்தன. வெளிநாட்டிலிருந்தான மூலதன உட்பாய்ச்சல்கள் பெருமளவிற்கு இல்லாமல் போனமை, மந்தமடைந்த பங்குச் சந்தைகளிலிருந்து கிடைக்கத்தக்கதாயிருந்த நிதியங்கள் குறைவடைந்தமை, ஆண்டின் இறுதிப் பகுதியில் மொத்த விற்பனை சுழல்வு வழமையைவிடக் குறைவாக இருந்தமையின் விளைவாக வியாபார தொழில் முயற்சிகள் திரவப் பிரச்சினைகளை எதிர்நோக்கியமை என்பனவற்றின் காரணமாக தனியார்துறையின் கொடுகடனுக்கான கேள்வி அதிகரித்தது. இதன் காரணமாக உயர்ந்த அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்கள் காணப்பட்ட போதும் தனியார் துறைக்கான கொடுகடன் 1994 இன் 17.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் 29.5 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1995 இன் இறுதிப் பகுதியில் அரசின் அதிகரித்த வங்கிக் கடன்பாடுகளுக்கு 1995 இல் உயர்ந்த பாதுகாப்பு மற்றும் உதவுதொகைச் செலவுகளின் பேரிலான காசுப் பற்றாக்குறை விரிவடைந்தமை காரணமாக இருந்ததுடன் அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி 1995 இன் கொடுகடன் விரிவினை மேலும் மோசமாக்கியது.

வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்குக் கிடைத்த கொடுகடனின் வளர்ச்சியானது பெரும்பாலும் முழுவதும் 1995 இன் பின்னரைப் பகுதியிலேயே ஏற்பட்டது. உயர்வடைந்து செல்லும் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செலவுகளின் பாதகமான நாணயத்தாக்கம், குறிப்பாக உள்நாட்டு நிதியியல் மூலவளங்களிலிருந்து அரசு பெருமளவு கோரல்களைப் பெற்ற ஆண்டின் பின்னரைப் பகுதியிலேயே காணப்பட்டது. எனினும் 1995 இன் இறுதியில் இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தக வங்கிகள் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தமையினால் வர்த்தக வங்கிகளிலிருந்து அரசிற்கான கொடுகடன் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இதன்விளைவாக அரசிற்கான மத்திய வங்கியின் தேறிய கொடுகடன் ரூ. 76,620 இலட்சத்தினால் உயர்வடைந்தது. இது இல்லாவிட்டால் சந்தையில் வட்டி வீதங்கள் மேலும் உயர்வாக இருந்திருக்கும்.

1995 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் முன்னைய இரு ஆண்டுகளினதும் பெருமளவு வீழ்ச்சிக்கு மாறாக, ரூ. 33,640 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்க் களஞ்சிய வசதிகள் சேதமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து (ரூ. 12,970 இலட்சம்) அக்கூட்டுத்தாபனத்தினதும் உலக கோதுமை விலைகள் (ரூ. 6,440 இலட்சம்) உயர்வடைந்தமையின் காரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினதும் உயர்ந்த கடன்பாடுகளைப் பிரதிபலித்தது.

சென்மதி நிலுவை திரண்ட பற்றாக்குறைகளைக் கொண்டிருந்தமையினால் முன்னைய ஆண்டினைப் போலன்றி வெளிநாட்டுத் துறையிலிருந்து பண நிரம்பலின் மீது அழுத்தமெதுவும் ஏற்படவில்லை. வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 3.2 சதவீதமாக சிறிதளவால் மாத்திரமே அதிகரித்துள்ளதுடன் இதற்கு செலாவணி வீத தாக்கமே காரணமாக இருந்தது. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1994 இன் 24.3 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து 12.8 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, வெளிநாட்டிலுள்ள சொத்துக்களில் தொடர்பான அதிகரிப்பு இல்லாமல் வதிவற்றோர் வைப்புக்கள் ஒன்று சேர்ந்தமையினால் வர்த்தக வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.

வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கும் உள்நாட்டு நிதிச் சொத்துக்களுக்குமிடையிலான வட்டிவீத வேறுபாடு விரிவடைந்து செல்வதன் காரணமாக வங்கிகள் அவற்றின் சொத்துப் பட்டியலை குறைந்த கவர்ச்சியுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து கூடிய கவர்ச்சியுள்ள உள்நாட்டுச் சொத்துக்களுக்கு மாற்றிக் கொண்டன. வர்த்தக வங்கியின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்து வெ.நா.வ. பிரிவுகளின் வைப்புக்களிலும் வங்கிகளின் வெளிநாட்டு நிலுவைகளிலும் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலித்தன.

1995 இல் ஒதுக்குப் பணம் அல்லது உயர்வலு நாணயம் 1994 இன் 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மூலப்பக்கத்தில் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சிக்கு உதவியது. இது, சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் வர்த்தக வங்கி வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலித்தது. ஒதுக்குப் பணத்தின் அதிகரிப்பில் பெரும்பாலும் 60 சதவீதம் திசெம்பரிலேயே ஏற்பட்டது. என்பது கவனிக்கப்படற்பாலதாகும்.

பணத்தின் வருமான சுற்றோட்ட விசை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து குறைவடைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களையும் வங்கித் தொழில் சொத்துக்களின் அதிகரித்த கவர்ச்சித் தன்மையையும் பிரதிபலித்தது. கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட போக்கினைப் பின்பற்றி 1995 இல் பணப் பெருக்கி ஏறத்தாழ 2.9 சதவீதத்தில் உறுதியாக இருந்தது.

1995 இல் நாணயக்கொள்கையை வகுக்குமாறு மத்தியவங்கி கேட்டுக் கொள்ளப்பட்ட சூழல் கடந்த ஐந்தாண்டுகளில் நிலவிய சூழலிலிருந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு வேறுபட்டதாக இருந்தது. கடந்த ஐந்தாண்டுகளில் பெருமளவு மூலதன உட்பாய்ச்சல்களின் காரணமாகத் தோன்றிய வெளிநாட்டுச் சொத்துக்களில் காணப்பட்ட பெருமளவு விரிவாக்கம் நாணய விரிவாக்கத்தினை மேலும் தூண்டியது. சென்மதி நிலுவையில் திரண்ட பற்றாக்குறை காணப்பட்டமையினால் 1995 இல் இத்தன்மை காணப்படவில்லை. இதனால் பணத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாகும். ஆகவே 1995 இல் நாணயக் கொள்கையை வடிவமைப்பதில் மத்திய வங்கி எதிர்நோக்கிய சவால் என்னவெனில் கொடுகடன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் இதன்மூலம் நாணய விரிவாக்கத்தின் ஏற்றுக்கொள்ளத்தகாத உயர்ந்த விகிதங்களின் பாதகமான தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வேளையில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்குவதைத் தவிர்க்கும் விதத்தில் வங்கித் தொழில்முறை போதுமான திரவ நிலைமையைக் கொண்டிருப்பதனையும் உறுதிப்படுத்துவதுமாக இருந்தது. இவ்வாண்டில் நாணயக் கொள்கை தொடர்ந்தும் இறுக்கமாக்கப்பட்டது. 15 சதவீதம் கொண்ட உயர்ந்த நியதி ஒதுக்கு விகிதம் ஆண்டு முழுவதும் பேணப்பட்டது. உற்பத்திப் பொருளாதார நடவடிக்கைகள் திரவ இறுக்கத்தினாலும், மிக உயர்ந்த வட்டி வீதங்களினாலும் நியாயமற்ற விதத்தில் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் திறைசேரி உண்டியல் கொள்வனவு மூலமும் 1995 இறுதியில் நிதி நிறுவனங்களின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை வரையறைக்குள் அனுமதித்ததன் மூலமும் மத்திய வங்கி அதன் இறுக்கமான நாணயக் கொள்கையை ஓரளவிற்கு தளர்த்தியது.

வங்கி அதன் திறைசேரி உண்டியல் சொத்துப் பட்டியலையும், அதன் சொந்தப் பிணைகளையும் பயன்படுத்துவதன் மூலம் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முக்கிய கருவியான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தது. முறையிலுள்ள மிகையான திரவத்தன்மையை அகற்றும் விதத்தில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1994 இறுதியில் ரூ. 50,990 இலட்சத்திலிருந்து 1995 மார்ச் இறுதியில் ரூ. 29,910 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. நாணய வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்காக,

இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் மத்திய வங்கி அதன் 3 மாத சொந்தப் பிணைகளை ஆண்டிற்கு 14.08 - 18.10 சதவீத சராசரி விளைவுகளில் வழங்கியது.


வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட மெதுவான தன்மையும் கொடுகடனுக்கான உள்நாட்டு கேள்வி அதிகரித்தமையும் திரவ நிதியங்களின் பற்றாக்குறைக்கும் ஆண்டிறுதியில் வட்டி வீதங்கள் நேரிணையாக உயர்வடைவதற்கும் வழியமைத்தன. ஆண்டிறுதியில் பாரிய செலவுக் கட்டுப்பாட்டுக் காசுப் பாய்ச்சல் பிரச்சினைகளின் காரணமாக கொடுகடனுக்கான அரசின் கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான உட்பாய்ச்சல் குறைவடைந்தமை மந்தமான பங்குச்சந்தையில் நிதிகளைப் பெறமுடியாமல் போனமை பணவீக்க எதிர்பார்ப்புக்கள், கூட்டுறவுத் துறையின் காசுப் பாய்ச்சலில் காணப்பட்ட பிரச்சனைகள் ஆகிய அனைத்தும் வங்கிக் கொடுகடனுக்கான தனியார் துறையிலிருந்து கேள்வி உயர்வடைய உதவின. இதன்விளைவாக, திறைசேரி உண்டியல் வீதங்கள் மாச்சில் 14.34 சதவீதத்திலிருந்து திசெம்பரில் 18.68 சதவீதத்திற்கும் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் மாச்சின் 18 - 25 சதவீதத்திலிருந்து திசெம்பர் இறுதியில் 20 - 58 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. மேலும் ஊக நடத்தையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நாளாந்த அழைப்புப் பணச் சந்தை வீதங்களின் அசைவுகளில் வழமைக்குமாறான அடிக்கடி மாறும் தன்மை காணப்பட்டது.

நாணயச் சந்தையின் இறுக்கத்தினை இலகுவாக்கும் பொருட்டு மத்திய வங்கி இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ததுடன் அதன் சொந்தப் பிணைகளையும் முதிர்ச்சியின் போது மாற்றிக் கொண்டது. ஓரிரவு அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையை வழங்குவதற்காகவும் அழைப்புப் பணச் சந்தையின் ஊக நடவடிக்கைகளை தளர்வுறச் செய்யும் பொருட்டும் மத்திய வங்கி நேர்மாறாக்கல் மீள் கொள்வனவு வசதிகளை நவெம்பரில் தொடங்கியது. மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் விற்பனைகளின் மீது விதிக்கப்படும் மீள் கழிவிடல் வீதமும் குறைக்கப்பட்டது. மேலும் வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதனம் மற்றும் ஒதுக்குகளில் 5 சதவீதம் வரையிலான தொகையை 1996 தொடக்கத்திலிருந்து வெளிநாடுகளிலிருந்து கடன்படுவதற்கு அனுமதிப்பதென திசெம்பர் இறுதியில் மத்திய வங்கி தீர்மானித்தது. இவ்வழிமுறை மூலதன கொடுக்கல் வாங்கல்களை தாராளமயமாக்குவதனை நோக்கிய மேலுமொரு நடவடிக்கையாகும். வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களது ஊகநோக்கங்களுக்காக கடன் வழங்குவதிலிருந்தும் அவற்றை ஊக்கம் குன்றச் செய்வதற்கு நன்னடத்தை ஊக்குவிப்பினையும் வங்கி பயன்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, நாணயச் சந்தையில் உறுதித்தன்மை மீள நிறுவப்பட்டது. அதிகரிக்கப்பட்ட திரவத்தன்மையானது மிக உயர்ந்த மட்டங்களிலிருந்து வட்டி வீதங்கள் மிதமடைய வழியமைத்தது.

மத்திய வங்கி நியதி ஒதுக்கு விகிதத்தினை சார்புரீதியில் உயர்ந்த வீதமான 15 சதவீதத்தில் ஆண்டு முழுவதும் தொடர்ந்து பேணியது. உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வெளிநாட்டிலுள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கான நியதிஒதுக்கு விகிதமான 5 சதவீதத்தை தொடர்ந்தும் கவர்ந்தது. இடருக்குள்ளான நிதிக் கூட்டு நிலையங்களிலிருந்து நிதிக்காக எழுந்த கோரிக்கைகள் ஒவ்வொன்றாக தொடர்ந்தும் வழங்கப்பட்ட போதும், மத்திய வங்கி நடுத்தர நீண்ட கால கொடுகடன் நிதியத்தின் கீழானகடன் வழங்கலிலிருந்தும் தன்னைத் தவிர்த்துக் கொண்டது.

1995 இன் தொடக்கத்தில் குறுங்கால வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்து திரவ நிலைமையில் குறிப்பிடத்தக்க இலகுத்தன்மையைப் பிரதிபலித்தமைக்கு மத்திய வங்கிப் பிணைகள் முதிர்ச்சியடைந்தமை, அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் அதிகரித்தமை மற்றும் மத்திய வங்கி இலாபங்கள் அரசிற்கு மாற்றல் செய்யப்பட்டமை என்பனவே முக்கிய காரணங்களாகும். இப்போக்கு இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தானாகவே மிகக் கடுமையாக மாற்றமடைந்தது. இதன் விளைவாக 12 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு வீதம் 1994 இறுதியின் 19.43 சதவீதத்திலிருந்து 1995 பெப்ரவரியில் 14.00 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து பின்னர் படிப்படியாக உயர்வடைந்து ஒத்தோபர் நடுப்பகுதியில் 20.5 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தினை அடைந்தது. அதன் பின்னர், வீதங்கள் 1995 இறுதிவரை மெதுவாக வீழ்ச்சியடைந்ததெனினும் 18 சதவீதத்திற்கு மேலேயே நிலைத்திருந்தது. அழைப்புப் பணச்சந்தை 1995 இன் பின்னரைப் பகுதியில் உயர்ந்த மாறுபடும் தன்மைகளுடன் அதே போக்கினைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் நடுத்தரகால, நீண்ட கால வீதங்கள் சில தளம்பல்களை பதிவு செய்தன.

கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகள் மந்தமாக இருந்தமைக்கு சந்தையில் வெளிநாட்டு




பங்கேற்பு தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். முதலீடுகள் பங்குச் சந்தையிலிருந்து வங்கித் தொழில் முறைக்கு மாறியமைக்கு கவர்ச்சிகரமான சாதகமான உண்மை வட்டிவீதங்களே காரணமாக இருந்தன. 1995 இல் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 33 சதவீதத்தினாலும், உணர் விலைச் சுட்டெண் 31 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

1995 இல் கொடுகடன் தகவல் பணியகச் சட்டம், வங்கித் தொழில் சட்டம், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், நாணய விதிச் சட்டம் பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணைகள் கட்டளைச் சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பவற்றை திருத்தியமைத்தன் மூலம் நிதியியல் துறை சீரமைப்புக்களை நோக்கி மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசதுறை நிதியியல் நிறுவனங்களின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கும் நிதியியல் துறையின் ஒழுங்கமைப்பு வரைச் சட்டத்தினை வலுப்படுத்துவதற்குமாக, அரச பிணைகளின் இரண்டாம்தரச் சந்தைகளை மேம்படுத்துவதற்கு இத்திருத்தங்கள் சட்டரீதியான வரைச் சட்டங்களை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது.

## 1.6 பிரச்சினைகளும் ஆய்வுக்கான விடயங்களும்

இலங்கையின் முன்னணி வளர்ச்சித் துறையான தயாரிப்புத் துறையின் இயக்கவிசை பாராட்டற்குரியதொன்றான போதிலும் இவ்வாண்டில் இத்துறை தொழிலாளர் அமைதியின்மையினால் பாதிக்கப்பட்டதுடன் பின்னர் அரசின் தலையீட்டினால் தீர்த்துவைக்கப்பட்டது. தொழிலாளர் சாசனத்தின் வடிவில் தொழிலாளர்களின் தொழில் நிலைமைகளையும் உரிமைகளையும் கோவைப்படுத்துவதற்கான முயற்சியொன்று மெற்கொள்ளப்பட்டபோதும் அதிகரித்த வேலை நிறுத்தங்களின் காரணமாக தொழில் தருநர்களும் முதலீட்டாளர்களும் இது சம்பந்தமான மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டிருந்தனர். உலகசந்தையில் போட்டித் தன்மையினைக் கொண்டிருக்கவேண்டுமென்பதையும் ஒத்துழைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்பதன் முக்கியத்துவத்தையும் தொழிலாளர்களும் தொழில்தருநர்களும் நன்கு உணர்வர். அதிகரித்த தொழில் வாய்ப்பற்ற தொழிற்படை ஒன்றின் சூழலில் தொழிற்சந்தையில் அதிகரித்த நெகிழ்ச்சித் தன்மையை உருவாக்க வேண்டியதன் தேவையை அரசு புரிந்திருத்தல் அவசியமாகின்றது. கூலி அதிகரிப்பினை உற்பத்தி அதிகரிப்புடன் இணைக்க வேண்டும் என்ற தேவையை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாவதோடு இதுவே அதிகரித்த போட்டியை எதிர்நோக்கும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் கூலி தொடர்பான கலந்துரையாடலுக்கான அடிப்படையாக அமைதல் வேண்டும். வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் மெதுவடைந்தமையின் காரணமாக கைத்தொழிலுக்கான மூலவள உட்பாய்ச்சலும் பாதிக்கப்பட்டது. இது வீழ்ச்சியடைந்த பங்குச் சந்தையுடன் இணைந்து அதிகரித்த வட்டி வீதங்களின் மத்தியிலும் தொழில் முயற்சியாளர்களை வங்கிக் கடன்களை அதிகரித்தளவில் நாடச் செய்தது. உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமையும் கைத்தொழில் துறையின் வசதியினைத் தடைப்படுத்திய இன்னுமொரு காரணமாகும். இந்த இடர்ப்பாடுகளின் சூழலில் கவனிக்கும் போது 1995 இல் கைத்தொழில் துறை குறிப்பிடத்தக்களவில் தாக்குப்பிடித்தது.

கைத்தொழில் துறையில் பொதுவாக எதிர்கொள்ளப்பட்ட இத்தகைய பொதுவான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக முதலீட்டுச்சபை ஆடைத் தொழிற்சாலைகளிலிருந்து புடவைகள் களவாக வெளியேற்றப்பட்டமையின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் தங்கியிருந்த சில புடவைத் தயாரிப்பாளர்கள் சந்தைப்படுத்தலில் கடும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1993 ஏப்ரலில் மீதான இறக்குமதித் தீர்வை குறித்துரைக்கப்பட்ட வீதமொன்றிலிருந்து 100 சதவீத பெறுமான விகித வீதமொன்றிற்கு மாற்றப்பட்டது. 1993 நவம்பரில் இந்த வீதம் மூன்று கட்டமுறைக்கு நகர்த்தப்பட்டதன் மூலம் 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் 1995 பெப்புருவரியில் தீர்வை ஆகக்கூடியது 35 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தமது வெளியீட்டில் 10 சதவீதத்தினை உள்நாட்டுச் சந்தைக்கு விடுவிப்பதற்கு முதலீட்டுச் சபைதொழில் முயற்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதைத்

தொடர்ந்து இந்த புடவைத் தயாரிப்பாளர்களின் பிரச்சினைகள் மேலும் மோசமாக்கப்பட்டது. 1995 இல் ஏழு முக்கிய தயாரிப்பாளர்களின் புடவை உற்பத்தி 17 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. புடவைத் தயாரிப்புக் கைத்தொழிலில் தொழில் இழப்பும் வெளியீட்டு வீழ்ச்சியும் பெருமளவில் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமொன்றான போதிலும் தயாரிப்பாளரின் இழப்புக்கு எதிராக நுகர்வோர் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதிகரித்த போட்டியானது மூலவள ஒதுக்கீட்டுத் திறனை அதிகரிப்பதோடு செலவுக் கட்டுப்பாட்டையும் உற்பத்தித் தரமேம்பாட்டையும் கட்டாயப்படுத்தும். உண்மையில் தமது வெளியீட்டை ஏற்றுமதிச் சந்தைக்கு இலக்கிட்ட மிகத்திறமை வாய்ந்த உற்பத்தியாளர்கள் இந்தச் சவால்களை எதிர்கொள்ளக் கூடியதாக இருந்தது எனினும், தம்மைத் தயார்படுத்திக் கொள்ள இன்னும் காலம் தேவைப்படும் உள்ளூர் தயாரிப்பாளர்களின் நலவுரித்துக்களை துறைமுகங்களில் கூடிய கண்காணிப்பின் மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம். இடைக்காலத்தில் மேலும் தீர்வைக் குறைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றமையினால் உள்நாட்டு புடவைக் கைத்தொழிலானது புதிய தொழில் நுட்பத்தின் முதலீட்டுடன் செலவுக்கட்டுப்பாடு மற்றும் போட்டித் தன்மை என்பனவற்றில் மிக உறுதியாக இருத்தல் அவசியமாகின்றது.

1995 சனவரியில் உலக வர்த்தக அமைப்பு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பல்வகை நூற் பொருட்களின் ஒழுங்குபடுத்தல்களின் கீழ் ஏற்கனவே காணப்பட்ட அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களும் புடவை ஆடைக்கான உருகுவே சுற்று இணக்கத்திற்கு ஒருமுகப்படுத்தப்பட்டன. மற்றும் 2005 ஆம் ஆண்டளவில் புடவை மற்றும் ஆடை வர்த்தகத்தை முழுமையான சுயாதீனமுடையதாக மாற்றும் நோக்கில் அனுமதிப்பங்குகளை பத்து ஆண்டுக்காலப்பகுதிக்கு கட்டம்கட்டமாக்கி புடவைகள் மற்றும் அணியும் பொருட்களை பலதரப்பு வர்த்தக முறையொன்றின் கீழ் ஒருங்கிணைப்பதற்காக புடவைகள் ஆடைகள் மீதான இணக்கமானது வரைச் சட்டமொன்றினை விருத்தி செய்துள்ளது. எனவே பல்வகை நூற்பொருட்களின் ஏற்பாடுகள் கட்டம் கட்டமாக்கப்படுவதைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய கடும்போட்டியினை எதிர்கொள்ளுவதற்கு இலங்கை தயாராகஇருக்க வேண்டியது அதிமுக்கியமான தாகின்றது.

வேளாண்மைத்துறையில் பெருந்தோட்டத் துறைக்கான கொள்கைகள் மிகவும் புலப்படுவதாகக் காணப்பட்டது. இத்துறையின் செயற்திறனை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. பெருந்தோட்டமல்லா வேளாண்மைத்துறை பல காரணிகளின் இடைச் செயலாற்றம் காரணமாக பாதிக்கப்பட்டது. மறுபக்கத்தில் நெல்லின் அதிகூடிய அறுவடையொன்று காணப்பட்டதோடு விலைகளின் கீழ் நோக்கிய தாக்கத்தினையும் கொண்டிருந்தது. இந்த நிலைமையானது வேளாண்மையாளர்களுக்கு எதிராக சார்பு ரீதியில் மாற்றங்களை ஏற்படுத்திய கோதுமை மாவுக்கான உதவிக் கொடுப்பனவினால் மேலும் மோசமாக்கப்பட்டது. மாவை அடிப்படையாகக் கொண்ட மலிவான உற்பத்திப் பொருட்களை நோக்கி நுகர்வோர் கேள்வி நகர்ந்தமையின் காரணமாக விலைகளின் மீது மேலும் கீழ் நோக்கிய தாக்கம் காணப்பட்டது. உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக நெற்சந்தைப்படுத்தும் சபை சந்தையில் நுழைந்தமையை நியாயப்படுத்துவதற்கு இது ஒரு காரணமாக அமைந்தது. நெற்சந்தைப்படுத்தும் சபை மொத்த நெல் வெளியீட்டில் 10 சதவீதத்தைக் கொள்வனவு செய்த வேளையில் அதனது ஒன்றுசார்ந்த கையிருப்புக்களைக் விற்பனை செய்ய இயலாது காணப்பட்டமையின் காரணமாக நெற் சந்தைப்படுத்தும் சபையின் வர்த்தக நிலைப்பாடு பெரும் சவாலை எதிர் நோக்கியது. இதன் விளைவாக நெற்சந்தைப்படுத்தும் சபை உள்நாட்டு வங்கித்தொழில் முறையிலிருந்து ரூபா 2 பில்லியன் கடன்பெறவேண்டி இருந்தது.

சில வேளாண்மைப் பொருட்களின் இறக்குமதிக்கான (உருளைக்கிழங்கு, பெரியவெங்காயம் மற்றும் மிளகாய்) உரிமம் வழங்கல் தொடர்ந்து காணப்பட்டமையானது வர்த்தக கொள்கையின் புலப்படுத்தும் தன்மையினை மறைத்துவிடக் கூடியதாக இருந்தது. இறக்குமதி உரிமத் தேவைப்பாடானது தொகை வடிவிலான இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறையொன்றாக விளங்கியதுடன் நுகர்வோருக்கான அதிக செலவுடன் சந்தைகளின் சிறந்த தொழிற்பாட்டுக்குத் தடையாகவும் இருந்தது. மேலும் இந்தக் கட்டுப்பாடுகளானது வர்த்தகம் மற்றும் தீர்வை தொடர்பான பொது உடன்பாடு/உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் உறுப்புரை (XVIII) (ஆ) விலிருந்து சென்மதி நிலுவை வாசகத்தை எழுப்பாமல் இருப்பதற்கான தடையாகவும் அமைகின்றது. தன்மதிப்பிரயோக மூலகம் தவிர்க்கப்படக்கூடியதாக இருக்குமாகையால் வேளாண்மையாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிமம் வழங்கலுக்குப்

பதிலாக மாறுபடும் தீர்வை அமைப்பு முறையொன்று மிகப் பொருத்தமானதாக அமையும். அத்துடன் இந்த விடயம் தொடர்பாக புலப்படுவதும் நிலையானதுமான கொள்கையொன்று இந்த வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பில் தனியார் துறை பங்கேற்புக்கான ஊக்குவிப்புக்களையும் வழங்கக்கூடியதாக இருக்கும்.

அமைப்புச் சீராக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக் காலப் பகுதியின் அனுபவமானது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்ச்சிகளிலிருந்து எழும் அறைகூவல்களை எதிர்நோக்கும் உள்ளார்ந்த வளத்தினை இலங்கைப் பொருளாதாரம் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டியது. அரச கட்டுப்பாட்டிலிருந்து நட்புச் சந்தைக் கொள்கையுடைய பொருளாதார உபாயம் ஒன்றின் அபிவிருத்தியுடன் பொருளாதார அமைப்புச் சீராக்க வழிமுறைகள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வழிமுறைகளில் வர்த்தக மற்றும் கொடுப்பனவு முறைகளின் தாராளமயமாக்கல் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வேறுபாடற்ற நலன்புரி உதவிக் கொடுப்பனவுகளின் குறைப்பு செலாவணி மற்றும் வட்டி வீதங்களையும் உள்ளடக்கிய சார்பு ரீதியில் விலைத் திரிபுகளை சரிசெய்தல். வெளிநாட்டு முதலீட்டு ஒழுங்குவிதிகளை தாராளமயமாக்கல், முக்கிய தீர்வைச் சீர்திருத்தங்கள், அரசுடைமை தொழில் முயற்சிகளை தனியார் மயப்படுத்தல், நிதியியல்துறை தாரளமயமாக்கல் மற்றும் உள்நாட்டுச் சந்தையின் ஒழுங்கு விதிகளைத் தளர்த்தல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து தொடக்க சீர்திருத்தங்கள் மேலும் விரிவாக்கப்பட்டன.

இந்த வகையான கொள்கைச் சீர்திருத்தங்கள் பொருளாதாரத்துக்கு பல நன்மைகளைக் கொண்டுவந்துள்ளன. இந்த சீர்திருத்தங்களின் தொடக்க நிகழ்ச்சியாக முதலீட்டுக்கும் உள்நாட்டுச் சேமிப்புக்களுக்குமிடையிலான இடைவெளியை நிரப்புவதற்கான வெளிநாட்டு மூலதனத்தின் அதிகரித்த உட்பாய்ச்சலாகும். உள்நாட்டு முதலீட்டை 1970 களின் நடுப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதத்திலிருந்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் உச்ச காலமான 1980 களின் ஆரம்ப காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு பொருளாதாரத்துக்கு இயலுமாகக் காணப்பட்டது. நாட்டின் தொழில் வாய்ப்பின்மை வீதம் கடுமையாக வீழ்ச்சியடைந்ததோடு வளர்ச்சி தடைப்பட்டிருந்த சீராக்கத்துக்கு முன்னான காலப் பகுதியிலிருந்து பொருளாதாரம் கிட்டத்தட்ட 5 சதவீத அதிகரிப்புக்கு விரிவடைந்தது. வளர்ச்சியின் நன்மைகள் பொருளாதாரத்தின் பல துறைகளுக்கு விரிந்து சென்றது. பொருளாதாரத்தின் பலதுறைகள் குறிப்பாக தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் இயக்க விசையினைக் காட்டின.

தொடக்க முதலீட்டு நடவடிக்கைகளின் ஆரம்பகாலப்பகுதியில் அரசிறைப் பற்றாக்குறையின் நிதியிடலுக்கான வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல் மற்றும் உள்நாட்டு வங்கிகளிலிருந்தான நிதியிடல் என்பனவற்றின் விரிவுத் தாக்கத்தின் காரணமாக நுகர்வோருக்கான உண்மைப் பயன்கள் விரைவாகக் குறைவடைந்தன. 1980 – 1982 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரி 19 சதவீதத்தை எய்திய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையுடன் இறைச் செயலாற்றத்தின் அதிகூடிய சமன்பாடின்மையானது நாணய மற்றும் விலை உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் இக்காலப்பகுதியில் 18.3 சதவீதமாக இருந்தது. அதிஉயர் பணவீக்கமும் அரசினால் உள்நாட்டு மூல வளங்களுக்கான அதிகரித்த உரிமைக் கோரலும் தனியார் முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்ததோடு அபிவிருத்தி உபாயத்தையும் பாதித்தது. அபிவிருத்திச் செலவின் ஒரு பகுதி வர்த்தக நியதிகளில் வெளிநாட்டுக் கடன்பாடுகளினால் நிதியிடப்பட்ட வேளையில் வெளிநாட்டு நிலைமைகளின் உறுதியான பேணலும் சவால்களைக் கொண்டிருந்தது. உயர் பணவீக்கமும் மூலதன பாய்ச்சல்களும் செலாவணி வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தியதோடு வெளிநாட்டுக் கடன்பாட்டை அதிகரிக்கச் செய்து படுகடன் பணிக் கொடுப்பனவு விகித நியதிகளில் அதிகரித்த கடன்பளுவையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக கடன்களையும் அதிகரிக்கச் செய்தது. எனினும் அடுத்த சில ஆண்டுகளுக்குள் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் 1980 களின் நடுப்பகுதிவரை இரட்டைப் புள்ளியிலேயே காணப்பட்டது.

வடபகுதி பயங்கரவாதக் குழுக்களுடனான உள்நாட்டு முரண்பாடுகள் அதிகரித்தமையுடன் பொருளாதார முகாமைத்துவப் பிரச்சினை மீண்டும் சிக்கலாக்கப்பட்டது. இது பாதுகாப்புச் செலவினத்தில் மிகக் கூடிய அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தனியார் மயப்படுத்தல் வரி அமைப்பின் ஒழுங்குமுறைப்படுத்தல், பயன்தரு பாதுகாப்பினைக் குறைக்கும் நோக்கிலான மேலதிக வர்த்தக சீரமைப்புக்கள், உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கிலான

நிதியியல்துறை சீர்திருத்தங்கள் என்பன போன்ற நாட்டின் அமைப்பு சீராக்க நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தன. இவ்விடயங்கள் பலவற்றில் நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்த பெறுபேறுகளின் மத்தியிலும் வளர்ச்சிச் செயல்முறையில், விரைவான வளர்ச்சிகாணும் பொருளாதாரங்களைவிட இலங்கை மிகவும் பின்தங்கி நிற்கின்றது. பொருளாதார விரிவாக்கத்தை அதிகரிப்பதற்கான மூலதனவாக்க வீதத்தினை அதிகரிப்பதற்கான அவசிய தேவை காணப்படுகின்றதோடு இது நிகழாவிட்டால் மானிட அபிவிருத்தியில் இதுவரை எய்தப்பெற்ற பெறுபேறுகளையும் நாடு இழக்க நேரிடும். 1985 இல் 23.8 சதவீதமாக விளங்கிய மொஉஉ / முதலீட்டு விகிதம் மூலவளக் கட்டுப்பாடுகளின் காரணமாக 1989இல் 21.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதிலிருந்து இந்த விகிதம் படிப்படியாக அதிகரித்துச் சென்று 1995 இல் 25 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது. எனினும், இடைக்காலத்திலும் நீண்டகாலத்திலும் விரைந்த வளர்ச்சிக்கான அடிப்படையை வழங்குவதற்கு முதலீட்டின் இந்த மட்டம் போதுமானதல்ல. அரசதுறையிலிருந்து முதலீட்டு அதிகரிப்புக்கான மூலவளங்களைக் கிடைக்கச் செய்யக் கூடிய உச்ச எல்லையை நாடு எய்தியுள்ளதாகத் தென்படுகின்றது. எனவே, மேலதிக வளர்ச்சியானது தனியார் துறையினரின் அதிகரித்த பங்கேற்பினை வேண்டி நிற்கின்றது.

அண்மைக் காலங்களில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசிறை நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் பாராட்டிற்குரியவையாகும். வரவு செலவுத் திட்ட மூலவளங்களின் சிக்கனமான பயன்பாட்டிற்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப் படல் வேண்டும். கடந்த காலங்களில் அதிகரித்த பாதுகாப்புச் செலவு முழு பொருளாதாரத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், அரசிறைப் பக்கத்தில் சீராக்கங்களில் பல மூலதனச் செலவின் மீது ஏற்பட்டுள்ளதோடு உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்பாடுகளின் கிரமமான அதிகரிப்புக்கும் இட்டுச் சென்றுள்ளது. பற்றாக்குறை நிதியிடலுக்கான கடன் ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வருவதற்கான நிலைமையை உருவாக்கியுள்ளதோடு அதிகரித்த கடன் பொறியினுள் அகப்படாதிருப்பதற்கான உடனடி மாற்றுவழிகள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்.

வங்கித் தொழில் முறையிலிருந்தான அதிகரித்த நிதியிடலை நாடி நிற்பது விரிவுத்தாக்கமாவதோடு தனியார் முதலீட்டையும் வெளியேறச் செய்கின்றது. நாணயக் கூட்டுக்களின் மிகை வளர்ச்சியானது இரண்டு வழிகளில் விலை மட்டத்தில் தாக்கத்தினைக் கொண்டுள்ளது. அதாவது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தி உண்மை வட்டிவீதங்களில் குறைப்பை ஏற்படுத்துகின்றது. பொருட்களினதும் பணிகளினதும் உற்பத்தி இயலளவின் மட்டுப்படுத்தலின் கீழ் குறிப்பிட்ட மட்டமொன்றிற்கு அப்பால் பண நிரம்பலை அதிகரிக்க அனுமதிப்பதானது கூட்டுக் கேள்வியின் அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தி பொதுவிலை மட்டங்களிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும். பணநிரம்பலின் தொடர்ச்சியான அதிகரிப்பின் மிகப் பாரதூரமானதும் பெரும் பயங்கரமானதுமான தாக்கம் என்னவெனில் நிதியியல் முறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்களை அதிகரிக்கச் செய்து பணத்தின் சுற்றோட்ட விசையினை அதிகரிக்கச் செய்வதாகும். இது இலகுவில் நேர்மாற்றுச் செய்யப்படக்கூடிய தொன்றல்ல. இவையே விரிவுத்தாக்க பண நிரம்பலின் நேரடித் தாக்கங்களாகும். எனவே மத்திய வங்கியிலிருந்தான அரசின் அதிகரித்த கடன்பாடுகள் ஊக்கமிழக்கச் செய்யப்படல் வேண்டும்.

கணிசமான இறக்குமதிகள் காணப்படும் இலங்கை போன்ற நாடொன்றில் விரிவுத்தாக்க நாணயக் கொள்கையொன்றானது மறைமுகமாக பணவீக்கத் தாக்கத்தினையும் கொண்டிருக்கும். உள்நாட்டு உற்பத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளில் பண நிரம்பலின் அதிகரிப்பொன்றானது கூட்டுக் கேள்வியை (பணச் செலவீடு) அதிகரிக்கச் செய்து இறக்குமதிகளின் அதிகரிப்புக்களுக்கு இட்டுச் செல்வதுடன் சென்மதி நிலுவைப் பற்றாக்குறையினை அதிகரிக்கச் செய்து செலாவணி வீதத்தின் வீழ்ச்சிக்கான கூடிய வலியுறுத்தலைக் கொண்டிருக்கும். எனினும், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி நிலுவைகள் மேலதிக கேள்வியை எதிர்கொள்ளப் போதுமானதாகக் காணப்படுமிடத்து அதிகரித்த நாணய விரிவாக்கத்தின் காரணமான விலை அழுத்தங்கள் அடையப்பட்ட பணவீக்க வீதங்களில் பிரதிபலிக்கப்படமாட்டாது. வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைப்பானது செலாவணி வீதத்தில் தாக்கத்தைக் கொண்டிருப்பதோடு செலாவணி வீதத்தின் அதிகரித்த தேய்வுக்கும் இட்டுச் செல்லும். இறக்குமதிகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பானது பொதுவிலைமட்டத்தின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லுவதோடு அதிகரித்த கூலிகளுக்கான வலியுறுத்தலையும் கொண்டிருக்கும். அதிகரித்த இறக்குமதி விலைகளும் கூலிகளும்

செலவினால் உந்தப்பட்ட பணவீக்கத்தினை ஏற்படுத்தி மேலும் தேய்வினை ஏற்படுத்தி உற்பத்தியாளர்களினதும் நுகர்வோர்களினதும் திட்டங்களில் பணவீக்க எதிர்பார்ப்புக்களை வலிதாக்கிக்கொள்ள உதவும் இந்த நிகழ்வுகள் பண வீக்க சுழற்சியை மீண்டும் உருவாக்கும்.

ஏனைய பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப்போன்றே இலங்கையிலும் விலை மாற்றங்கள் வழங்கலில் காணப்படும் குறுங்கால தளம்பல்கள், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து இடர்ப்பாடுகள், தொழிற்சந்தைக் கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் ஆகிய அமைப்புக் காரணிகளினாலேயே ஏற்படுகின்றன. விரிவுத்தாக்க நாணயக் கொள்கையானது இந்த அமைப்புக் காரணிகளிலிருந்து உருவான விலை அதிகரிப்புக்களை மோசமடையச் செய்கின்றன. எனினும் பாரிய இறைப் பற்றாக்குறை போன்ற வேறுபல பேரண்டப் பொருளாதார சமமின்மைகள் காணப்படுமிடத்து பணவீக்கத்தினை ஆகக் குறைந்த மட்டங்களுக்குக் குறைப்பது சாத்தியமானதோ உகந்ததோ அல்ல. ஏனெனில் அத்தகைய முயற்சியொன்றானது பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமாகலாம். பணவீக்கத்தினைப் படிப்படியாகக் குறைப்பதற்கு இலக்கிடப்பட வேண்டியுள்ளதோடு அமைப்புச் சமமின்மையின் திருத்த நடவடிக்கைகளுடன் இணைந்து செல்லல் வேண்டும்.

இடைக்காலத்தில் வரவு செலவுத் திட்ட முகாமைத்துவமானது ஒரு பக்கத்தில் பாதுகாப்பு மற்றும் முற்காப்பினை வழங்கவேண்டிய அரசின் மரபுவழிப் பணிகளுக்கும், மறுபக்கத்தில் அத்தியாவசியப் பணிகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் என்பனவற்றிற்கும் இடையில் பொருத்தமான சமன்பாட்டினை பேணுவதற்கான அடிப்படை விடயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டியிருக்கும். இது தொடர்பாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி உட்பட தனியார்துறையினரால் கையாளப்படக்கூடிய அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் அரசின் மிகக் குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுடன் தனியார் துறையிடம் விடப்படல் வேண்டும். மூலதன ஒதுக்கீடு, முதலீட்டின் விரைவுபடுத்தல், பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சியின் பேணல் என்பனவற்றை மேம்படுத்துவதற்கான சிறப்பானதும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான அடிப்படை யொன்றினை இது வழங்கக்கூடியதாக இருக்கும்.